# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
ஆவணி 4
றம்ழான் பிறை 15
ஞாயிறு (20-8-1978)
நிருவியது 1947
புத்தகம் 32
இதழ் 23

விலை சதம் 60


## சன்சோனி ஆணைக்குழு முன் 'சுதந்திரன்

சன்சோனி ஆணைக் குழு முன்னிலையில் சுதந்திரன் பத்திரிகை பற்றியும்; சுதந்திரன் வெளியீடுகள் பற்றியும் எடுத்துக் கூறி அவற்றுக்கு விளம்பரம் தேடித்தந்துள்ளார் யாழ் நாக விகாரைப் பீடாதிபதி நந்தராமதேரோ.

"தமிழர் விடுதலைக் கூட்டணியின்பத்திரிகையான 'சுதந்திரன்' 27-2-77 இதழில் தமிழ் மார்க்ஸிச வாதிகளின் கட்டுரையொன்று வெளிவந்திருக்கிறது. இக்கட்டுரையை அமெரிக்காவிலிருந்து கலாநிதி ராஜராஜேந்திரன் எழுதியிருந்தார். அக்கட்டுரை இலங்கையிலுள்ள சகல மார்க்சிய வாதிகளுக்காகவும் எழுதப்பட்டிருந்தது. அக்கட்டுரையில் தமிழர்கள் ஒரு சிறுபான்மை இனம் அல்ல என்றுகுறிப்பிடப்பட்டிருந்தது.


அக்கட்டுரையை ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மொழி பெயர்த்து பிரதி பண்ணி சிலர் விநியோகித்தனர். அதே போல சுதந்திரனின் நாலாவது வெளியீடான "தமிழ்மண்காப்போம்—தாயகம் மீட்போம்" என்ற சிறுநூலும் வெளியிடப்பட்டது. அதை எழுதியவர் ஈழவேந்தன் என்பவராவர்.

"அப்புத்தகத்தின் இரண்டாவது பக்க அட்டையில் முகம்மதலிஜின்னாவின் மேற்கோள் ஒன்று அச்சிடப்பட்டிருக்கிறது."

—இவ்வாறு நாகவிகாரைப் பிக்கு தமது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன் சாட்சியமளித்த மற்றோர் யாழ்ப்பாணத்துச் சிங்களவர் தீ தகரும் தமிழ் மக்கள் தமிழ் ஈழத்துக்குத் திரும்ப வேண்டுமென்று வலியுறுத்திய சுதந்திரன் கட்டுரையொன்று பற்றி ஆணைக்குழு முன் சுட்டிக்காட்டியிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

சிங்கள வாசகர்களும் சுதந்திரனுக்கு இருப்பதை சுதந்திரன் இதன் மூலம் அறிந்து மகிழ்ச்சியடைகிறது.




# கியூபா மாநாட்டில் தனிநாடு முழக்கம்!

## யூ. என். பி. பிரதிநிதிகள் கலக்கம் இதனால் நிலவியது பதட்டம்



கியூபாவின் தலைநகரான ஹவானாவில் அண்மையில் நடைபெற்ற உலக இளைஞர் மாநாட்டின்போது தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை ஆகியவற்றின் சார்பில் கவிஞர் காசிஆனந்தன், மாவை சேனாதிராசா, ஆகியோர் கலந்துகொண்டு சிங்கள சிறீலங்கா ஏகாதிபத்தியத்தையும் சிங்கள காலனித்துவத்தையும் எதிர்த்து தமிழீழ மக்கள் நடத்திவரும் தேசிய விடுதலைப் போராட்டம் பற்றித் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் எடுத்துக்கூறியதுடன் இப்போராட்டத்துக்கு சோசலிச நாடுகளின் உதவியையும் கோரினர்.

தமது முகமூடி தம் முன்னிலையிலேயே கிழிக்கப்படுவதைக் கண்டு சிங்கள சிறீலங்காவைச் சேர்ந்த ஐ.தே. கட்சிப் பிரதிநிதிகள் உள்ளூர ஆத்திரமும் பதட்டமும் அடைந்தனர் என்றும், வன்முறை தோன்றக்கூடிய அளவுக்கு பதட்ட நிலை நிலவியதாகவும், எனினும் நிலைமை கட்டுமீறிப்போகாதவாறு தடுக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

கியூபா மாநாட்டை தக்க முறையில் பயன்படுத்தி— தமிழ் ஈழ மக்கள் சிங்கள ஏகாதிபத்தியஒடுக்குமுறைக்கும் சிங்கள ஏகாதிபத்திய காலனித்துவக் கொள்கைக்கும் சிங்கள ஏகாதிபத்திய விஸ்தரிப்பு நடவடிக்கைகளையும் எதிர்த்து தமிழ் ஈழ நாட்டின் விடுதலைக்காக நடத்திவரும் தேசீய விடுதலைப் போராட்டம் பற்றி வெளிநாடுகளின் பிரதிநிதிகளுக்கு— குறிப்பாக சோசலிச நாடுகளின் பிரதிநிதிகளுக்கு கவிஞர் காசிஆனந்தனும், மாவை சேனாதிராசாவும் எடுத்து விளக்கினர்.

கியூபா வெளிவிவகார அமைச்சரையும் கவிஞர் காசி ஆனந்தன் சந்தித்து தமிழீழ விடுதலைப்போராட்டம் பற்றி எடுத்துரைத்தார். அத்துடன் பாலஸ்தினிய விடுதலை இயக்கத் தலைவர் திரு. அரபாத் நடத்திய ஒரு பத்திரிகையாளர் மாநாட்டிலும் காசி ஆனந்தன் கலந்துகொண்டார்.

கவிஞர் காசியின் உரையும், அவர் அங்குபாடிய கவிதையும் இந்த இதழின் உள்ளே வெளியிடப்பட்டுள்ளது.

கியூபா மாநாட்டிலும் சோவியத்— ஜேர்மன்— ஆசிய பிரதிநிதிகளின்மூன்று கூட்டு நிகழ்ச்சிகளிலும் தமிழ் இளைஞர் பேரவையின்

—8-ம் பக்கம் பார்க்க

# தீண்டாமைக்கு சாவுமணி!

"கடந்த 6-8-78 த.வி. கூ. பொலிகண்டிக்கிளையின் தீவிர முயற்சியினாலும் அவ்வூரின் பொது மக்களின் பேராதரவினாலும் பொலிகண்டி கி.சே. பிரிவில் தீண்டாமைக்கு சாவுமணி அடிக்கப்பட்டுள்ளது. அன்று அவ்வூரிலுள்ள ஆலயங்கள், சிகை அலங்கார நிலையங்கள், தேனீர்க்கடைகள் முதலியன சாதி, மத பேதமின்றி அனைவருக்கும் சம அந்தஸ்து வழங்குகின்றது. இதை மகிழ்ச்சியுடன் தமிழ் மக்களுக்கு அறியத் தருகிறோம்.

மேலும் மேற்படி வைபவங்களுக்கு பேராதரவுநல்கி ஒத்துழைத்த ஆலய பரிபாலகர்கள், தேநீர்க்கடை உரிமையாளர்கள். சிகைஅலங்கார நிலைய உரிமையாளர்கள் ஆகியோருக்குதங்கள் பத்திரிகைவாயிலாக நன்றி தெரிவிக்கிறோம்."

—மேற்கண்ட இனிப்பான செய்தியைபொலிகண்டி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளைத்தலைவர் திரு.ச.கணேசலிங்கம், பொருளாளர் திரு. ம.ஆனந்தராசா செயலாளர் திரு.சி. சிவபாலசிங்கம் ஆகியோர் கூட்டாக கையெழுத்திட்டு சுதந்திரனுக்கு அறிவித்துள்ளனர்.

ஆவரங்காலில் நடைபெற்ற கூட்டணி மாநாடு தீண்டாமைக்கும், சாதிவேறுபாட்டிற்கும், சாவுமணியடிக்கும்படி விடுத்த அறைகூவலைத் தொடர்ந்து உடனடியாக இப்புனித கைங்கரியத்தைச் செய்து முடித்த பொலிகண்டிக்கிளையினரைப் பாராட்டுகிறோம்.

## கைம்பெண்ணின் கூச்சல்

"இன்று 'மெட்ராஸ் ஹிந்து' பத்திரிகை தமிழர் பிரச்சினையைப் பற்றித் தன் மனம் போன போக்கில் எழுதி வருகிறது. இப் பத்திரிகையை ஜவகர்கலால் நேரு முன்பொரு தடவை ஒரு கைம் பெண்ணுக்கு ஒப்பிட்டு எழுதியிருந்தார். எதையும் தைரியமாகச் செசால்லமல் பயந்து முக்காடுபோட்டு நோகாமல் சொல்வார்கள் என இந்து பத்திரிகைக்காரர்களைப்பற்றி நேரு தன் மகளுக்கு எழுதியகடிதங்களில் குறிப்பிட்டிருக்கிறார்"

—கொழும்புக் கருத்தரங்கில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இ. ராசமாணிக்கம்,
கொழும்பு-13.

கே: இந்தியாவிலிருந்து வெளிவரும் 'இந்து'வும் 'எக்ஸ்பிரஸும்' ஜே.ஆர். ஆட்சியை ஆதரிப்பதும், தனிநாடு கோரிக்கையை எதிர்ப்பதும் ஏன்?

ப: இந்தியாவில் முதலாளித்துவத்துக்கு முண்டு கொடுத்துநிற்கும் இந்த இரண்டு பத்திரிகைகளும், இலங்கையிலும் முதலாளித்துவத்துக்கு முண்டு கொடுக்கும் ஜே. ஆர். ஆட்சிக்குத் துதிபாடுவதில் ஏது ஆச்சரியம்? முதலாளித்துவம், முதலாளித்துவத்தைத்தான் ஆதரிக்கும். நாம் கோருவது தான் "சோசலிசத் தமிழ் ஈழம்" ஆச்சே! சோசலிசத்தையும் இன விடுதலையையும் எப்படி இந்த முதலாளித்துவ ஏடுகள் ஆதரிக்கும்?

கே: தமிழ் மக்கள் தமது பிரதேசங்களில் சென்று குடியேறாமல், அவைவெறுமனே கிடப்பதாற்றான் அங்கு சிங்களவரை சிங்கள அரசு குடியேற்றுகிறது. இதிலே என்ன பிழை என்று கேட்போருக்கு என்ன கூறுகிறீர்கள்?

ப. ஒரு நாட்டில் நிலம் சும்மா கிடப்பதால், அந்த நாட்டு நிலத்தில் வேறோர் நாட்டவரைக் கொண்டு வந்து குடியமர்த்த முடியாது. இதை சர்வதேச சட்டமும் அனுமதிக்காது. இந்தியாவில் மக்கள் குடியேறாத பகுதிகள் இருக்கின்றன என்பதற்காக, இலங்கை அரசு இங்கிருந்து மக்களை அங்கு கொண்டுசென்று குடியேற்ற முடியுமா? அப்படி குடியேற்ற முனைவது இந்தியாவை இலங்கை பலவந்தமாக ஆக்கிரமிக்கும் நடவடிக்கையாகவே கருதப்படும். அதேபோலத்தான் தமிழ் ஈழமும், சிங்கள சிறிலங்காவும் இருவேறு நாடுகள், தமிழ் ஈழத்தில் நிலம் சும்மா கிடக்கிறதென்பதற்காக சிங்கள சிறிலங்கா தனது நாட்டவரை தமிழ் ஈழத்தில் குடியேற்ற முடியாது. அப்படிக் குடியேற்றுவது அசல் ஆக்கிரமிப்பு நடவடிக்கையே. இந்த ஆக்கிரமிப்பை நாம் எதிர்த்துப் போராடவேண்டும்.

ஃ

சு. விநாயகமூர்த்தி,
உப்புவெளி.

கே: புதிய அரசியலமைப்பின் கீழும் தமிழ் அரசாங்க ஊழியர் சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாக வேலை இழக்க நேரிடுமா?

ப. சிங்களம் மட்டுமே தொடர்ந்தும் ஆட்சிமொழியாக இருக்கிறது. அதனால் தமிழ் அரசாங்க ஊழியர்கள் குறிப்பிட்ட காலத்தில் சிங்களத் தேர்ச்சி அடைந்தால் மட்டுமே அவர்களுக்கு சேவை உறுதியும் சம்பள உயர்வுகளும் கிடைக்கும். சிங்களம் சித்தியடையாவிடில் சீட்டுக்கிழிக்கப்படும். புதிய அரசியலமைப்பின் கீழும் இதுதான் நிலை. ஆனால் சிங்களவர்களான அரசாங்க ஊழியர்களுக்கு இவ்வாறான மொழிச்சுமை எதுவும்கிடையாது.

ஃ

இ. ராமநாதன்,
யாழ்ப்பாணம்.

கே: ஒரு கட்சித் தொண்டன் கொள்கையையா தலைவர்களையா முதலில் நேசிக்க வேண்டும்?

ப: கொள்கையே ஒரு தொண்டனுக்கு உயிர், கொள்கையை செயற்படுத்தவே தலைவர்கள் உருவாக்கப்படுகிறார்கள். தலைவர்களை உருவாக்குவது கூடத் தொண்டர்கள்தாம் தலைவர்கள் எப்போதாவது கொள்கை மாறிப்போனாலும், அச்சமயத்தில் கொள்கையைக்காக்க வேண்டியது உண்மையான தொண்டனின் கடமை. தலைவர்கள் மாறலாம், மடியலாம், ஆனால் ஒரு இயக்கத்தின் கொள்கை மறையக்கூடாதென்பதே தந்தை செல்வா எமக்குப் போதித்த அரசியல் தர்மம்!

ஃ

ச. புவனேந்திரன்,
யாழ்ப்பாணம்.

கே: 'செந்தமிழர் இயக்கம்' கூட்டணியின் இணைந்த இயக்கமாக அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுவிட்டதா?

ப: இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. அதுபற்றி முடிவு எடுக்கவேண்டிய அதிகாரம் கூட்டணியின்பொதுச்சபையிடமே விடப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் நடைபெற்ற பொதுக்குழுக்கூட்டத்திலேயே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது. அதன் பிறகு இந்த விடயம் பொதுச்சபையினால் இன்னும் ஆராயப்படாமலேயே இருக்கிறது.

ஃ

மு. க. வீரசிங்கம்,
க. சி. சுப்பிரமணியம்,
அல்வாய் தெற்கு. அல்வாய்.
தமிழ் ஈழம்.

கே: தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களுக்கு "ஒரு போத்தல் நல்லெண்ணெயும். தோசையும்" கிடைத்தால் போதும் அவர்களுக்கு வேறு 'ஈழம்' எதுவும் தேவைப்படாது என்று வியலுவ எம். பி. கூறியிருக்கின்றார். இதிலிருந்து தமிழர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய விசயம் என்ன?

ப: தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களின் தற்போதைய மிதவாதப்போக்கினைத் தவறாக விளங்கிக் கொண்டு விட்டார்கள் ஆளுங்கட்சியினர். இனியாவது நமது தலைவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் 'ரோசம்' வருகிறதா பார்ப்போம்!

ஃ

செலவி. மா. நித்திலா,
அச்சுவேலி வடக்கு.

கே. ஆவரங்கால் மகாநாட்டில் ஒரு கவிஞர் நகைச்சுவையாகவும், கிண்டலாகவும் பாடியது பற்றி — கிளிநொச்சி பா. உ, "வாயில் வந்ததெல்லாம் கவிதைகளா?" என்று கடிந்து கொண்டது பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன!

ப: "வாயில் வருவதெல்லாம் கவிதையல்ல" என்று சங்கரி கூறியது உண்மைதான். உள்ளத்துஉணர்வின் வெளிப்பாடுதான்கவிதை! குறித்தகவிதை அவரது உணர்வின் வெளிப்பாடு என்பது எனக்குத்தெரியும். ஏனெனில் என் எழுத்துலக ஆரம்பத்தில் நானும் ஒருகவிஞனே! சங்கரி அவர்களுக்கும் கவிதை உள்ளம் இருந்திருக்குமானால் அதை ரசித்திருப்பாரே தவிர கோபித்திருக்கமாட்டார்.

எஸ். ரவீந்திரன்,
கொழும்பு—3

கே: பைலட் பிரேம்நாத் என்ற படத்தில் வரும் எல். ஆர். ஈஸ்வரி, ஏ. இ. மனோகரன் பாடும் 'உடறட்ட மெனிகே", என்ற பாட்டில் "நாலு பக்கம் கடல் இருக்கும் சிங்கள நாடு தீவு" என்று வருகிறது. இங்கு இவ்வளவு லட்சம் தமிழர்கள் இருக்கும்போது ஒரு தமிழ் படத்தில் இப்படியான தமிழ்ப்பாடல் வருவது சரியா? படம் தயாரித்தவர்களுக்கு இது தெரியவில்லையா?

ப; தயாரிப்பாளர்களுக்கும் பாடுகிறவர்களுக்கும் பணம் பண்ணும் நோக்கமே தவிர ஈழத்தமிழனின் உணர்ச்சியை மதிக்கும் நோக்கம் இருந்தால் தானே! இந்தப்பாடல் படத்திலிருந்து நீக்கப்பட வேண்டும்—இன்றேல் இந்தப்படத்தை இங்கு திரையிடும் போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஓர் இயக்கம் நடைபெற வேண்டும்.

ஃ

யோகா வேல்நாதன்,
கற்றன்.

கே: கடந்த வன்செயலின் பின் சன்சோனிக் கமிஷன் விசாரணையில் ஒருவர் சாட்சியமளிக்கும் பொழுது கூறியிருந்தார் இந்தியர்களை இந்தியாவுக்குப்போகும் படியும், யாழ்ப்பாணத்தவரை இங்கு வைத்தே கொல்லுவோம் என்று சிங்களவர்கள் சொல்லி அடித்தார்களாம், ஆகவே இந்தியர்களும் இந்தியா சென்று யாழ்ப்பாணத்தவரும் அழிந்தால் சிங்கள ஏகாதிபத்தியம் நிலைக்குமா?

ப: இலங்கைத்தமிழர்கள் அழிந்துபோகின்ற ஒரு நிலை வருமானால், அவர்கள் தனியே அழியமாட்டார்கள்; அழியினும் சிங்களவர்களை தம்மோடு சேர்த்துக்கொண்டே அழிவார்கள். ஏனெனில் சிங்களவர் நமது சகோதரர் அல்லவா?

கே: தமிழர்களே! உங்கள் தாயகத்தை நோக்கிச் செல்லுங்கள் என்று அமெரிக்கப் பேராசிரியர்களே கூறுகிறார்கள். ஆனால் கொழும்பு நகரமே சொர்க்கபுரியென்று நினைக்கும் எமது தமிழ் முதலாளி வர்க்கத்தைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: நாம் அமைக்கவிருக்கும் சோசலிசத் தமிழ் ஈழத்தில் முதலாளிகளுக்கு இடமில்லை. எனவே தமிழ் முதலாளிகள் முதலாளித்துவ ஆட்சி நடக்கும் சிங்கள சிறீலங்காவிலேயே தமது சுயநலத்துக்காக ஒட்டிக்கொண்டிருப்பார்கள். அவர்களை அலட்சியப்படுத்துங்கள்!

ஃ

சி. கனகராஜா,
212 பிரதானவீதி,
கொழும்பு-11

கே: "தமிழ் இளைஞர் பேரவையில்" நான் அங்கத்தினராக சேருவதற்கு என்ன செய்யவேண்டும்?

ப: நிர்வாகச் செயலாளர், தமிழ் இளைஞர் பேரவை, 238 பிரதானவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

# 'ஸ்ரீலங்கா' 'இலங்கை' ஆனது!

## கல்கி ஆசிரியரின் பெருந்தன்மையை பாராட்டுவோம்!

தமிழக இலக்கியச் சந்தையை 'ஆபாசக்குப்பைகள்' என்று வர்ணிக்கத் தக்க ஏடுகள் புதிது புதிதாக ஆக்கிரமித்து, இலக்கியச் சுவைஞர்களை வேறு எங்கோ அழைத்துச்சென்று, தமிழனது பழம் பெரும்பண்பாட்டுக்கும் இலக்கியப் பாரம்பரியத்துக்கும் சவால் விட்டு வரும் ஒரு சோதனையான கட்டத்தில்— தமிழ்க் கலாசாரத்தின் தொட்டிலாகவும், பண்பாட்டின் உறைவிடமாகவும் விளங்கி வந்த 'கல்கி' மறுபடியும் வெளிவருவது தரமான வாசகர்களுக்கு ஒரு தித்திப்பான சேதிதான்.

தமிழகப் பத்திரிகையுலகில் அமைதியும், பண்பும் நிறைந்த அகல் விளக்காக கல்கி விளங்கியது— எதிர்காலத்திலும் விளங்க வேண்டும்.

'கல்கி' இதழில் இலங்கையைச் சேர்ந்த நமது சோ. சிவபாதசுந்தரம் தமது இலங்கைப் பயணம்பற்றிதொடர் கட்டுரை யொன்று எழுதி வருகிறார். சுவை நிறைந்த இக்கட்டுரைத் தொடருக்கு தரப்பட்டிருந்த தலைப்பை பார்த்ததும் எனக்குப் 'பகீர்' என்றது.

கட்டுரையின் தலைப்பு "சிறீலங்கா யாத்திரை!

இலங்கையென்ற இனிய தமிழ்ப் பெயரிருக்க 'சிறீலங்கா' என்ற சிங்களச் சொல் கட்டுரைத் தலைப்பில் இடம் பெற்றிருந்தது.

இதுபற்றி உடனடியாக 'கல்கி' ஆசிரியர் திரு. கி. ராஜேந்திரனுக்கு எழுதினேன்.

எனது கடிதத்துக்கு அவர் உடனடியாக பதில் எழுதினார்.

'ஸ்ரீலங்கா' யாத்திரை என்று தலைப்புக்கொடுத்த பிறகு இப்போது அதை மாற்றுவது நன்றாகஇராது. இது பற்றி சிவபாதசுந்தரம் முதலிலே யோசிக்காதுவிட்டது வியப்புத்தான். எனினும் தங்கள் கடிதத்தைப் பிரசுரிப்பதன் மூலம் ஓரளவு நியாயம் செய்கிறேன்"

இவ்வாறு எழுதிய திரு. ராஜேந்திரன் மேலும் பின்வருமாறு எழுதியிருந்தார்.

"இலங்கையில் நடக்கும் விஷயங்களைத் தமிழ் நாட்டவருக்கு மிகவும் ருசிக்கத் தக்கனவற்றை அவ்வப்போது எழுதி அனுப்பினால், பரிசீலித்து இயன்ற அளவில் பயன்படுத்திக் கொள்ளலாம். முடிந்தால் அது தொடர்பான படங்களும் அனுப்பலாம். இலங்கையில் உள்ள எழுத்தாளர்கள் பலரிடமும் ஒத்துழைக்குமாறு எங்கள் சார்பில் கேட்டுக் கொள்ளுங்கள்"

என்றும் குறிப்பிட்டிருந்தார். ('கல்கி' இதழுக்கு இலங்கையிலுள்ள எழுத்தாளர்கள் தமதுஒத்துழைப்பை வழங்கு வார்களாக.)

மேற்கண்டவாறு எனக்கு கடிதமெழுதியிருந்த திரு. ராஜேந்திரன், அடுத்து 16-7-78 வெளிவந்த கல்கியில் எனது கடிதத்தையும் பின்வருமாறு பிரசுரித்திருந்தார்.

"கல்கியில் நமது சிவபாத சுந்தரனார் எழுதி வரும் இலங்கைப் பயணக் கட்டுரை சுவையாக ஆரம்பமாகியுள்ளது. ஆயினும் ஒரு குறை. இலங்கையின் பெயர் 'இலங்கை' யென்றே இலங்கை அரசியல் அமைப்புத்திட்டத்தின் உத்தியோகபூர்வமான தமிழ் மொழி பெயர்ப்பில்குறிப்பிட்டுள்ளது. ஆங்கிலத்திலும் சிங்களத்திலுமே இலங்கையின் பெயர் 'சிறீலங்கா'. தமிழில் இலங்கைதான். சட்டரீதியாகவும் இது ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் கட்டுரைத் தலைப்பு 'ஸ்ரீ லங்கா யாத்திரை' என்று ஏன் இருக்க வேண்டும்?

இவ்வாறு எனது கடிதத்தைப் பிரசுரித்ததுடன் சரி; ஆனால் கட்டுரைத் தலைப்பு திருத்தப்படமாட்டாது போலும் — அப்படியேதான் அதாவது 'சிறீலங்கா' என்று தான் தொடர்ந்து வரப்போகிறது என்று எண்ணிக் கொண்டேன்.

கட்டுரையாரம்பமான பிறகு கட்டுரைத் தலைப்பை

—7-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சியோனிசத்துக்கு எதிராக பாலஸ்தீனர்கள் போராடுவது போலவே சிங்கள இனவாதத்துக்கெதிராக நாம் போராடுகிறோம்!"

# தமிழீழ விடுதலைக்கு உங்கள் ஆதரவைத் தாருங்கள்!

## ஹவானு இளைஞர்கள் மாநாட்டில் கவிஞர் காசி ஆனந்தன் முழக்கம்

தலைவர் அவர்களே! தோழர்களே! வீரமிக்க—புரட்சியின் நிலைக்களனான கியூபாவின் தலைநகராம் ஹவானுவில் நடைபெறும் 11வது உலக இளைஞர் மாணவர் விழாவின் ஒரு நிகழ்ச்சியாக நடைபெறும் இக்கூட்டத்தில்கலந்து கொள்வதை எண்ணி நான் உண்மையில் மகிழ்ச்சியடைகிறேன்.

கியூபாவின் தலைநகரான ஹவானுவில் நடைபெற்ற 11வது உலக இளைஞர் மாணவர் விழாவின் போது 29-7-78 அன்று அனைத்துலக கலைஞர் அரங்கில் "ஏகாதிபத்திய எதிர்ப்பு — சமாதானம் — நட்புறவு ஆகியவற்றுக்கான இளங்கலைஞர்கள் — எழுத்தாளர்கள் ஆகியோரின் அரசியல் போராட்டம்" (The Political Struggle of the Young Artist and Writers for Anti-Imperialist Solidarity, Peace and Friendship) எனும் தலைப்பில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் ஆங்கிலத்தில் நிகழ்த்திய உரையின் தமிழாக்கம் இது. கவிஞரின் சொற்பொழிவு ஏககாலத்தில் ஸ்பானிஸ், பிரஞ்சு. ரஷ்யன், ஜெர்மன், அரபு ஆகிய ஐந்து மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது.

"நான் முதலில் என்னை உங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு எதிராக தலை



வர் அமிர்தலிங்கம் அவர்களின் மாபெரும் தலைமையில் விடுதலைப் போராட்டத்தை இலங்கையில் நடத்திக் கொண்டிருக்கும் தமிழ் ஈழ மக்களின் விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் இவ் விழாவில் கலந்து கொள்ளும் ஐந்து பிரதிநிதிகளில் ஒருவனாக நான் உங்கள் முன் நிற்கிறேன்.

எங்கள் தாயகமாம் தமிழ் ஈழத்தை மீட்கும் நோக்கோடு—சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நாங்கள் போராடுகிறோம்.

உலகம் பூராவும் பரவிய அடிமைகளின் — ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் எங்கள் ஒருமைப்பாட்டைக் காட்டும் ஓர் அரிய வாய்ப்பினை இந்த அனைத்துலக இளங் கலைஞர்கள் அரங்கு எங்களுக்கு வழங்குகின்றது. இச்சந்தர்ப்பத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு பொறுப்புள்ள செயற்குழு உறுப்பினர் என்ற வகையில் உங்களோடு தான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

இந்து சமுத்திரத்தில் காட்சிதரும் சின்னஞ்சிறு தீவான இலங்கை—வரலாறு தொடங்கிய காலம் முதல் சிங்கள சிறீலங்கா — தமிழ் ஈழம் என்னும் இரு நாடுகளைக் கொண்ட ஒரு நிலமாகவே இருந்து வந்திருக்கிறது என்பதை முதலில் நீங்கள் ஐயத்துக்கு இடமின்றி உங்கள் இதயத்தில் பதித்துக் கொள்ளுங்கள் — நான் பேச்சைத் தொடருகிறேன்.

*1619* ஆம் ஆண்டு போர்த்துக்கீசர் இலங்கையைக்கைப் பற்றிய போதுதான் —நாங்கள் எங்கள் சுதந்திரத்தைப் போர்த்துக்கீசரிடம் பறிகொடுத்தோம். அதுவரை நாங்கள் தனி அரசோடு வாழ்ந்து வந்தோம்.

போர்த்துக்கீசரிடம் இருந்து டச்சுக்காரர் ஆட்சியை பறித்தெடுத்தார்கள். பின்பு டச்சுக்காரரிடம் இருந்து பிரிட்டிசார் ஆட்சியைக் கைப்பற்றினர்கள்.

பிரிட்டிஷ்காரர் எங்களை ஆளும்போது நிர்வாக வசதிக்காக *1833* ஆம் ஆண்டு சிங்கள சிறீலங்காவையும் தமிழ் ஈழத்தையும் முதன் முதல் ஒன்றாக ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும் சம்பவம் நடைபெற்றது.

*1833* ஆம் ஆண்டு வரை அந்நிய ஏகாதிபத்திய வாதிகளால் ஆளப்பட்ட நிலையிலும் அரசியல் நிர்வாகத்தைப் பொறுத்தவரை இரண்டு அடிமை நாடுகளாகவே நாங்கள் இயங்கி வந்தோம்.

இலங்கை ஒரு நாடல்ல— இரண்டு நாடுகள் கொண்ட ஒரு தீவு என்ற வரலாற்று உண்மையைக் குழி தோண்டிப் புதைத்து விட்டு—பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் எங்கள் இனிய தமிழ்சழத்துக்கும் குழி வெட்டி வைத்தார்கள்;

*1948* ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இலங்கையை விட்டு வெளியேறிய போது இலங்கையில் வாழ்ந்த சிங்கள சிறீலங்கா மக்களின் கையிலேயே சுதந்திரத்தைக் கொடுத்துவிட்டுப் போயிற்று. தமிழ் ஈழத்தின் குடிமக்கள் காலில் மீண்டும் அடிமைத்தளை மூட்டப்பட்டது.

போர்த்துக்கீச ஏகாதிபத்தியம் —டச்சு ஏகாதிபத்தியம்—பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆகிய மூன்று ஏகாதிபத்தியங்களின் கீழ் அழுந்திய தமிழ் மக்கள் பொல்லாத சிங்கள ஏகாதிபத்தியத்தின் கீழும்அடிமைகளாய்—விம்மி -விழிநீர் சிந்தி வாழும் நிலை ஏற்பட்டது.

*1848* ஆம் ஆண்டு தொடக்கம் நாங்கள் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடி வருகிறோம்— சியோனிசத்துக்கு எதிராக பாலஸ்தீனர்கள் போராடுவது போல— இனவாதத்துக்கு எதிராக தென்னுபிரிக்கர்கள் போராடுவது போல.

1948 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து எம்மை ஆண்டுவரும் சிங்கள அரசாங்கங்கள்—தமிழ் இனத்தின் மொழி—கலை—கலாச்சாரம் — வாழ்நிலம் ஆகியவற்றை அழிக்கும் ஆக்கிரமிப்புக்கொள்கையை —சிங்கள இனவாதத்தையே செயல்படுத்தி வருகின்றன— இதனல் நாளுக்கு நாள் தமிழ்த் தேசிய இனம் தனது தனித்துவத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ் இனத்தின் மக்கள் தொகையில் பாதிப்பேர் தங்கள் குடியுரிமையையும் வாக்குரிமையையும் இழந்து அனதைகளாய் இருபதாம் நூற்ருண்டில் தலைகுனிந்து நிற்கிறார்கள்;

தமிழர் தாயகத்திலேயே தமிழரைச் சிறுபான்மையினர் ஆக்கும் நோக்கோடு- திட்டம் இடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள்—அரசாங்கத்தின் உதவியுடனேயே நடத்தப்படுகிறன.

எங்கள் தாய்மொழி தாழ்வுறும் நிலையில் சிங்கள மொழி மட்டும் அரசகரும மொழி ஆக்கப்பட்டிருக்கிறது.

கல்லூரிகளிலும்- தொழில் துறைகளிலும்— எங்களுக்கு எங்கள் திறமை அடிப்படையிலோ— எங்கள் மக்கள் தொகை அடிப்படையிலோ வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை.

எங்கள் இளைஞர்கள் விசாரணைகள் இன்றி இருட்சிறைகளில் தள்ளப்படுகிறார்கள்—

5—ம் பக்கம் பார்க்க

## தமிழ் ஈழம் மெய்யே!

ஆள்கின்றய் கொடுஞ் சிங்கள லங்கா!
ஆணவம் சேட்டை அனைத்தும் நிறுத்து!
வாழ்தமிழ் ஈழம் தமிழர் தாயகம்!
வரலாற்றுண்மை! நெஞ்சில் இருத்து!

பண்டைத் தமிழன் காலின் சுவடுகள்
பைந்தமிழ் மண்ணில் அழிந்திட வில்லை!
அன்றைத் தமிழன் ஆடிய குளத்தில்
அலைகள் இன்னும் கலைந்திட வில்லை!

ஆள்கின்றய் கொடுஞ் சிங்கள லங்கா!
ஆணவம் சேட்டை அனைத்தும் நிறுத்து!
வாழ்தமிழ் ஈழம் தமிழர் தாயகம்!
வரலாற்றுண்மை! நெஞ்சில் இருத்து!

கோல வானைக் குருவி விழுங்குமோ?
கொடுவாய் முதலை விழுங்குமோ ஆற்றை?
ஈழ மண்ணை லங்கா விழுங்குமோ?
எங்கே பார்க்கலாம்... என்னடா சேட்டை!

ஆள்கின்றய் கொடுஞ் சிங்கள லங்கா!
ஆணவம் சேட்டை அனைத்தும் நிறுத்து!
வாழ்தமிழ் ஈழம் தமிழர் தாயகம்!
வரலாற்றுண்மை! நெஞ்சில் இருந்து!

பாவி நீ எம் மண்மிசை இந்நாள்
பாய்ச்சும் துப்பாக்கியின் கொடும் ரவைகள்
நீ அவை ரவைகள் என நினைந்தாலும்
நிச்சயம் அவை சுதந்திர விதைகள்!

ஆள்கின்றய் கொடுஞ் சிங்கள லங்கா!
ஆணவம் சேட்டை அனைத்தும் நிறுத்து!
வாழ்தமிழ் ஈழம் தமிழர் தாயகம்!
வரலாற்றுண்மை! நெஞ்சில் இருத்து!

தமிழ் ஈழம் யாம் பெறுவது மெய்யே!
தகர்ந்து சிதறும் எதிரிகள் கையே!
தமிழர் நெஞ்சில் எரிவது நெருப்பே!
தமிழ் வீரம் தமிழர் கையிருப்பே!

ஆள்கின்றய் கொடுஞ் சிங்கள லங்கா!
ஆணவம் சேட்டை அனைத்தும் நிறுத்து
வாழ்தமிழ் ஈழம் தமிழர் தாயகம்!
வரலாற்றுண்மை! நெஞ்சில் இருத்து!

—காசி ஆனந்தன்

(ஹவானுவில் நடைபெற்ற 11வது உலக இளைஞர் மாணவர் விழாவில் பாடிய ஆங்கிலக் கவிதையின் தமிழாக்கம்.

## Thamils Will Liberate Their Own Land

Oh! Sinhala Tyranny of Sri Lanka!
Shed your cheekiness and your fuss
For we are Thamils of Thamil Eelam
And this great land belongs to us!

Our fathers lived and walked here!
Their foot prints are still clear!
Their rippled pool is jet to rest!
This rich heritage you wont wrest!

Can the falcon gobble the sky?
Can a crocodile a river?
Can you Lanka gobble our Land?
Come on! you may try your hand?

From the guns of Sri Lanka
Bullets you aim at Thamil Nation
Are not bullets as you may think
They are seeds of liberation!

Thamils will liberate their own Land!
They have a raging fire at heart!
They will smash the enemy's hand!
Being Tamils they know the Art!

Oh! Sinhala Tyranny of Sri Lanka!
Shed your cheekiness and your fuss!
For we are Tamils of Thamil Eealam!
And this great land belongs to us!

— Kasi Anandan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இளைஞர்களே எழுங்கள்! விழிப்புணர்ச்சி பெறுங்கள்!

## மட்டுநகரில் கரவையூர் செல்வம் பேச்சு!

மட்டக்களப்பு தமிழ்இளைஞர் பேரவையின் சார்பில் மட்டக்களப்பு வை. எம். சி. ஏ. மண்டபத்தில் கிளைத்தலைவர் திரு. பொன். வேணுதாஸ் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் வண, செல்வரத்தினம் அடிகளார் (கரவையூர் செல்வம்) 'இளைஞர்களும் அரசியல் விழிப்புணர்வும்' என்னும் தலைப்பில் ஆற்றிய உரை இது,

"பேசிப் பேசிக்காலத்தைக் கடத்துவதில் எந்த வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை. செயல் ஒன்று தான் மனித சமுதாயத்தை மேம்படுத்தத் தக்க படைக்கலன் என்பதை நாம் சந்தேகத்துக்கு இடமின்றி ஒப்புக் கொள்ளவேண்டும், "செயல் படுவதனுல் உலகம் அழகு பெறும்" என்கிறது வைபிள். ஆகவே எதற்கும் அஞ்சாத தமிழ் இளைஞர்களே நீங்கள் "செயல் செயல்" எனத் துடியுங்கள். இன்று தமிழ்ச்சாதி எல்லாவற்றையும் இழந்து வெறும் மொட்டை மரமாக நின்று கொண்டிருக்கிறது. விடுதலை என்பது தங்கத்தட்டில் வைத்துத் தரப்படும் என்று நினைக்கலாமா? சிலரைப் பல காலம் ஏமாற்றலாம்? பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம்? ஒரு சமுதாயத்தை எந்த நாளும் ஏமாற்றலாமா?

தலைவர்களை நம்பத் தான் வேண்டும்; ஆனுல் அவர்கள் நிலை தவறிக்கெட்டுப் போனுல் என்ன செய்வது? கட்டுப்பாடுகாக்க வேண்டியவர்கள் அதனைத் தூக்கி வீசினுல் என்ன செய்வது? இளைஞர்களின் உணர்ச்சியை தலைவர்கள் நன்கு மதித்து அவர்களுக்குத் தக்க மதிப்புக் கொடுக்க வேண்டும். இன்று தமிழ் இளைஞர்கள் அரசியல் விழிப்புணர்ச்சி பெற்று விட்டார்கள், தனது இனம் பல வழிகளிலும் திட்டமிட்டு அழிக்கப்படுவதைக் கண்டு இளைஞர்கள் எரிமலையாக குமுறிக் கொண்டிருக்கிருர்கள்.

குடியேற்றம் எனும் நச்சரவு இன்று தமிழ் ஈழத்தை அழித்துக் கொண்டிருக்கிறது. இதனை விட்டு வைத்தால் தமிழ் இனமே முற்ருக ஒழிக்கப்பட்டு விடும். பேசுவது ஒன்று செய்வது ஒன்ருகத் தலைவர்கள் இருக்கக் கூடாது. "நல்ல தருணம் நழுவ விடாதீர்கள்" என்ற கூற்றுக்கு இணங்க இன்று இளைஞர்கள் அரசியலில் நல்ல தருணத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கிருர்கள். சாதி நமக்கு வேண்டாம் என்று மேடையிலே முழங்குகிறேம். ஆனுல் இன்று சாதி ஒழிக்கப்பட்டு விட்டதா? உடுப்பிட்டியிலே இராசலிங்கத்தை வெல்லவைத்தோம், ஆனுல் அந்த வெற்றி, இதயம் நிறைந்த வெற்றியாக கணிக்கப்படுகிறதா? சாதி வெறி இன்னும் அதன் கோரத்தை நீக்கிக் கொள்ளவில்லை.

வாய் வேதாந்தம் பேசுவதால் உண்மையான நோக்கத்தைக் கண்டு கொள்ள முடியுமா? பேசுவது ஒன்று, செய்வது ஒன்று இது என்ன இலட்சியம்? காந்தி போல், யேசு போல் உண்மையான சேவை செய்யும் மனப்பான்மை ஒவ்வொரு தமிழனுக்கும் வரவேண்டும். அப்படி வரும் நாளே உண்மையான பொன்னுளாகும்.

மதகுருமார் அரசியல் பேசலாமா என்று சிலர் கிண்டல் செய்கிருர்கள். உலகத்தைத் திருத்த யேசு புறப்பட்டது அரசியல் நோக்காலா? உரிமை அற்ற சாதியாகத் தமிழர் வாழுவதைக் கண்டும் காணுதவர் போல் வாழலாமா? உரிமை கேட்டுப் போராடுவது யேசு தந்த படிப்பினை. யேசுவின் கொள்கையில் ஊறிப் போய்க் கிடக்கும் நான் உரிமை முழக்கம் செய்வது எப்படித் தவருகும். அவலம் நீக்கப் போராடியவர் யேசு. அவர் கொள்கையை கையேற்கும் நான் தமிழ் ஈழத்துக்குப் போராடுவது எப்படித் தவருக இருக்க முடியும்?

தலைவர்கள் எப்பொழுதும் நிதானமாக அளந்து பேச வேண்டும்; நிதானம் தவறினுல் எல்லாமே தவறி விடும். தமிழர் என்று கூறினுல் இந்துக்கள் மட்டுமல்ல, கிறிஸ்தவர், முஸ்லீம் இவர்களும் தமிழர்கள் தான். ஒரு மதத்தை மட்டும் ஏற்றிப் புகழும் பண்பு தலைவர்களுக்கு இருக்கக் கூடாது. தலைவர்கள் எல்லா மதங்களுக்கும் உரித்தான காவலர்கள்.

இது இளைஞர்களின் ஒப்பரிய யுகம். அன்று தொட்டு இன்று வரை இளைஞர்களே அரசியலின் கதாநாயகர்களாக விளங்கி வருகிருர்கள். இளைஞர்களின் அரசியல் விழிப்புணர்ச்சி ஏகாதிபத்திய வாதிகளின் கொட்டத்தை அடக்கும் இலட்சியக் கேடயமாகும். நான் கட்சிக்கு அப்பாற்பட்ட யேசுவாதி. என்ருலும் தமிழன் இழந்த உரிமையை, தமிழ் ஈழப் பொக்கிஷத்தை மீண்டும் பெற உணர்ச்சி கொண்டுள்ள தமிழன்.

இன்று தலைவர்களின் செயல் வேகம் காணுது என்று இளைஞர்கள் கூறுகிருர்கள். பார்க்கப் போனுல் அது உண்மையாகவே விளங்குகிறது. கோஷம் எழுப்பிப் புண்ணியமில்லை. இலட்சியத் துடிப்புடன் வரலாறு படைக்க வேண்டும்.

நான் அறிந்த ஒரு சீர்திருத்த வாதி கொழும்பிலே

—5-ம் பக்கம் பார்க்க

# ஆவணி நினைவுகள்

ஓராண்டு ஓடி மறைந்து விட்டது!

தீச்சுவாலையாக—தீராத வடுவாக—தீயோரைப் பழி வாங்கும் வஞ்சினமாக — தீர்ப்பு வழங்கும் நாளை எதிர் நோக்கியிருக்கும் சிந்தனையாக—அந்தநிகழ்ச்சிகள்—அந்த நினைவுகள்—நம் நெஞ்சில் நாடோறும் எதிரொலித்துக் கொண்டேயிருக்கின்றன.

ஆம் — சென்ற ஆண்டு ஆவணித்திங்களில் வந்து சென்ற இதே நாட்கள் ஈழத்தமிழர்களின் செவ்விரத்தம் இந்நாட்டுத் தெருவீதிகளிலே கொட்டப்பட்ட நாட்கள்!

ஆடுகள் போல், மாடுகள் போல், அநியாயச் சிங்களவரால் அப்பாவிகளான நம்,அருமைத்தமிழர்கள் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டு—துண்டு துண்டாக வீசப்பட்ட நாட்கள்!

தமிழனைச் சிங்களவன் தனது கால் பந்தாக்கி உதைத்து விளையாடிக்களித்த நாட்கள்!

வீதியோரங்களில்—வேலைத்தலங்களில் — வீடுகளில் பேருந்துகளில்—புகைவண்டிகளில்--இப்படிக்கண்டகண்ட இடமெங்கணும் தமிழர்கள் வெட்டப்பட்டும், அடிக்கப் பட்டும், தாக்கப்பட்டும் விரட்டப்பட்டும் மிருகத்தனமாகக் கொடுமைப்படுத்தப்பட்ட நாட்கள்—

பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் கடைகண்ணிகள், வீடுகள், தொழில் நிலையங்கள், தீக்கிரையாக்கப் பட்டு அவர்கள் பாடுபட்டுத்தேடி வைத்திருந்த சொத்துக்கள் அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டு அனுதைகளாக்கப்பட்டு, அகதிகளாக விரட்டியடிக்கப்பட்ட நாட்கள்!

பின்னஞ்சிறு இளந்தளிர்களை—குஞ்சுக் குழந்தைகளை கூட—அவை தமிழ்க் குழந்தைகள் என்ற ஒரே காரணத்தினுல் மிருக வெறி கொண்ட சிங்களக்கயவர்கள்—பெற்ரேல் ஊற்றி எரியூட்டிய நாட்கள்!

மானம் ஒன்றே உயிரெனக்கொண்டு வாழும் தமிழ் மாதர்கள்—ஒருவர் இருவராய் அல்ல —கூட்டம் கூட்டமாக வந்த சிங்கள மிருகங்களால் கதறக்கதறக் கற்பழிக்கப்பட்டு கண்ணீரும் கம்பலையுமாகக் கதறிய நாட்கள்!

தமிழர்களின் புனித வணக்கத்தலங்களாகிய இந்து ஆலயங்களும், கிறித்தவ தேவாலயங்களும் அடித்து நொருக்கப்பட்டு, அங்குள்ள தெய்வ விக்கிரகங்கள் தூள் தூளாக்கப்பட்டு—மிலேச்சத்தனத்தின் உச்சக்கட்டம் கட்டவிழ்க்கப்பட்டு விடப்பட்டநாட்கள்—

சிங்கள சிறீலங்காவில் வாழ்ந்த தமிழர்கள் சிங்களப் பொலிசாரின் அனுசரணையுடன் இவ்விதமாக சிங்கள வெறியர்களால் பயங்கர இனக்கொலைக்கு ஆளாக்கப் பட்ட அந்த வேளையில்—

தமிழ் ஈழத்தில் சிங்களப் பொலிசாராலும், ஆயுதப்படைகளாலும் தமிழர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டனர்; தமிழர் நகரங்கள், கிராமங்கள் எரிக்கப்பட்டன; யாழ்ப் பாணம், வவுனியா, திருகோணமலை போன்ற நகரங்கள் தீக்கிரையாகிய அந்தக்கொடுமைகளின் நினைவுகள் என்றுமே நெஞ்சை விட்டகலாது.

தமிழ் ஈழத்தில் சிங்கள அரசுகளால் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் பொலிசாரின் அனுசரணையுடன் தமிழர்களையே 'பதம்'பார்க்கப் புறப்பட்டது — தமிழர்களுக்கு அவர்களது சொந்தப் பிரதேசத்திலேயே முதல் தடவையாக விடுக்கப்பட்ட ஒரு சவாலாக அமைந்ததையும் நாம் மறப்பதற்கில்லை!

சிங்களப் பொலீஸ், ஆயுதப்படைகளால் தமிழர்கள் இவ்விதம் தாக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட போது—தமிழ் மாதர்கள் கற்பழிக்கப்பட்டபோது—வீதிகளிலே தமிழர் பிணங்களாக வீழ்த்தப்பட்டபோது-தமிழன் இரத்தம் ஆருக ஓடியபோது— தேசிய அரசுப் பேரவையிலே மிக அமைதியாக எழுந்து நின்று—தமிழ் மக்களின் பிரதிநிதிகளைப் பார்த்து—

"போர் என்ருல் போர்; சமாதானம் என்ருல் சமாதானம்"

என்று வீருப்புப்பேசினுர் அன்றைய 'தார்மீகப்' பெரியவர்—இன்றைய ஜனுதிபதி ஜே. ஆர்; துட்டகைமுனு இன்னும் உயிரோடு வாழ்வதாக கூறினுர் அவரது சீடர் ஒருவர்; இந்தச் சவாலைத் தமிழினம் மறக்கமுடியுமா?

1958ம் ஆண்டு சிங்களவர்களால் அடிபட்டோம்; மீண்டும் 1977 ஆவணியில் வரலாறு காணுத இனக் கொலைக்கு ஆளாக்கப்பட்டோம்.

## எண்ணம்

ஏன் நமக்கு இந்தநிலை? அந்நிய சிங்களவன் கையிலே அடிமைகளாக அடிபட்டுச் சாகவா நாம் பிறந்தோம்?

நமது நாட்டை—நமது அரசுரிமையை—ஆட்சியை—இழந்ததுதான் இந்த இழிநிலைக்கு ஒரே காரணம்!

உலகிலே தமிழனுக்கு பாதுகாப்பளித்திட தமிழனுக்கென்ருெரு நாடு இல்லாததே அவன் அடிபட்டு உதைபட்டு, அவலப் கண்ணீர் வடிப்பதற்குக் காரணம்!

ஆம், இழந்த நாட்டை, இழந்த அரசை மிகவிரைவாக மீள அமைப்பதொன்றின் மூலமே நமது வருங்காலச் சந்ததிகளாவது இங்கு அடிமை நிலை துடைத்து தலை நிமிரமுடியும்!

சுதந்திரப்பாதையில் தமிழினம் செல்லுகின்றபோது இத்தகைய "இனக்கலவரப் பயமுறுத்தல்கள்" இன்னும் பல தமிழர்களை நோக்கி எதிர்காலத்திலும் ஏவி விடப்படலாம்! இதிலிருந்து ஓரளவு தமிழினம் தப்புவதற்கு ஒரே வழி சிங்களநாட்டில் பணயப் பொருட்களாக உயிரையும் கையில் பிடித்தபடி காலத்தை யோட்டாது— தமிழ் ஈழத்தின் நீண்ட பிரதேசங்களில் தமிழர்கள் வந்து குடியேற வேண்டும்; சிங்கள நாட்டை விட்டு வெளியேறி விடவேண்டும்! நமது தாயக மண்ணையும், நமது உயிரையும், நமது எஞ்சிய சொத்துக்களையும் காப்பாற்றிக்கொள்வதற்கு இது ஒன்றே வழியென்பதை சிங்கள நாட்டில் வாழும் தமிழர்கள் உணர்ந்துகொள்வார்களாக. ஆவணிக்கலவரம் கூறிடும் பாடமும் இதுதான்!

ஆவணிக் கலவரத்தின்போது உயிரிழந்த தமிழர்களின் ஆத்மா சாந்தியடைவதற்குள்ள ஒரே வழி—தமிழ் ஈழத்தை மீட்டு, அங்கு நமது அரசுரிமையை ஆட்சியை நிலைநாட்டுவதே; வேறு எந்தப் பிரார்த்தனைகளாலும் அவர்களது ஆத்மாசாந்தியடையப்போவதில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழர் பாரம்பரியப் பூமியைப் பறிப்பதே

# ஜே. ஆரின் பயங்கரத் திட்டம்!

## அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் மண்ணுக்கு ஆபத்து!"

### கொழும்புக் கருத்தரங்கில் அமிர் விளக்கம்

"ஈழம் வாழ் தமிழ்பேசும் மக்களுக்கென்ருேர் பாரம்பரிய பூமி கிடையாது என 1977ம் ஆண்டு மார்கழி மாதம் 6ம்திகதி தேசிய அரசுப்பேரவையில் தற்போதைய ஜனதிபதி ஜே. ஆர். ஆற்றியயுரை மிகவும் பயங்கரமானது. ஒரு மரத்தின் ஆணிவேர் மண்ணில்தான் ஊன்றி இருக்கும். அதே போல் தமிழ் இனத்தின் வாழ்வும் மண்ணில்தான் ஊன்றியுள்ளது. அதை அபகரிப்பது அவனது ஆணிவேரையே அறுப்பதற்கு ஒப்பானது.

இந்த நிலம் அபகரிப்புப் படலத்தை டி. எஸ். சேனநாயகாதான் தொடக்கி வைத்தார். 1957ல் செல்வா—பண்டா ஒப்பந்தப்படி வடக்கும் கிழக்கும் தமிழர்களது பாரம்பரிய பூமியாக காலஞ்சென்ற பண்டாரநாயகாவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்போது ஜே. ஆரின் அரசாங்கம் தமிழர்களின் பாரம்பரிய பூமியையும் அபகரிக்கவுள்ளது. 1957ல் செய்யப்பட்ட பண்டா—செல்வா உடன்படிக்கையை எதிர்த்து தற்போதைய ஜனதிபதி நாடு பூராவும் இனத்துவேஷப் பிரசாரம் செய்தார்.

1957 ஆடிமாதம் 26ம் திகதி ஒப்பந்தம் எழுதப்பட்டது. 1957 ஆவணிமாதம் 14ம் திகதி இந்த உடன்படிக்கையில் சில மாற்றங்களைச் செய்தபோதும் காலஞ்சென்ற பண்டாரநாயகா சில விடயங்களைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார். அதன்படி, "குடியேற்றத்திட்டங்களை ஏற்படுத்தி வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களை அவர்களது பிரதேசத்திலேயே சிறுபான்மையாக்கக் கூடாது" என்ருர்.



1960 பங்குனி தேர்தலில் வெற்றிபெற்ற டட்லியின் அரசாங்கம் இதை ஏற்க முடியாது என்றது. ஆனல், 1965ம் ஆண்டு டட்லி எம்முடன் எமது பிரதேசம் தொடர்பாக ஒரு முடிவுக்கு வந்தார். அப்போது ஜே. ஆரும் அவருடன் சேர்ந்து இதை ஏற்றுக் கொண்டார். இந்த ஒப்பந்தம் 1965ம் ஆண்டு பங்குனிமாதம் 26ம் திகதி எழுதப்பட்டது.

இதன்படி காணிகள் வழங்கப்படும்போது அந்தந்த மா வட்டத்தைச் சேர்ந்தோர்களுக்கே முதலிடம் வழங்கப்பட வேண்டும் எனவும், வடக்கு கிழக்கு வாழ் தமிழர்களுக்கே வடக்குகிழக்கில் காணி வழங்கப்பட வேண்டும் எனவும், அதற்கடுத்தபடியாக, இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கே வடக்கு கிழக்கில் காணி வழங்கப்படவேண்டும் எனவும், ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இப்படியான விதிகளை கூடவேயிருந்து 1965 பங்குனி 26ம் திகதி ஏற்றுக்கொண்ட ஜே. ஆர், 1966ம் ஆண்டு சனவரி 8ம் திகதி பாராளுமன்றத்தில் இது தொடர்பான சட்டவிதிகளை கொண்டுவந்தபோது குடியேற்ற திட்டம் சம்பந்தமான விதிகளை நீக்க பெரும் முயற்சிகளை எடுத்தார்.

இன்று அபிவிருத்தி என்ற போர்வையில் குடியேற்றத் திட்டத்தின் ஊடாக பெரும் ஆபத்து எமது மண்ணுக்கு ஏற்பட்டுள்ளது. மொழிச் சலுகை என்ற இனிப்புப் பூசிய நஞ்சைக் கொடுத்து நிலத்தை அபகரிக்கப் பார்க்கிருர்கள்.

பாலஸ்தீனத்தில் இஸ்ரவேல் அமைக்கப்பட முன்பு அவர்கள் அந்த நிலத்தில் குடியேறி முதலில் நிலத்தைப் பாதுகாத்தார்கள். 'EXODUS' என்ற நவீனத்தில் "கிபூக்ஸ்" என்ற யூத இனம் நிலத்தைப் பாதுகாக்க அங்கு பட்ட துன்பம் விவரிக்கப்பட்டுள்ளது. நிலத்தைப் பாதுகாத்துக் கொண்டுதான் சந்தர்ப்பம் வரும்போது ஐ. நா. உதவியுடன் இஸ்ரவேலியர் சுதந்திரப் பிரகடனம் செய்தனர். அவர்களுடைய நிலையில் நாம் இல்லை. எமக்கென ஒரு பூமி பாரம்பரியமாக இருக்கிறது. ஆனல் நாமோ அதை நாளுக்கு நாள் இழந்து கொண்டே போகிருேம். ஆகவே முதலில் நமது நிலத்தைப்பாதுகாக்க வேண்டும்.

### யாழ்ப்பாணத்தில் கலாயோகியின் நூற்ருண்டு விழா

கலாயோகி ஆனந்தக் குமாரசாமியின் நூற்ருண்டு விழா யாழ்ப்பாணத்தில் 22-8-78 அன்று வெகு விமரிசையாக நடைபெறுகிறது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் அவரது துணைவியாரும் கலந்து கொள்கின்றனர்.

அன்று காலை 9-30மணிக்கு ஆனந்தக்குமார சுவாமி சிலைக்கு மாலை சூட்டப்படும். காலை 10 மணிக்கு செல்வி. மஞ்சுளா துரைராஜாவினுல் வரையப்பட்ட ஆனந்த குமாரசாமியின் உருவப் படம் யாழ் பொது நூலகத்தில், பேராசிரியர் சு. வித்தியானந்தனுல் திரைநீக்கம் செய்யப்படும். நூற்கண்காட்சியையும் பேராசிரியரே திறந்து வைப்பார்.

மாலை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் நினைவுக்கூட்டத்தில் பேராசிரியர் சு. வித்தியானந்தன், கலாநிதி இந்திர பாலா, ஜேம்ஸ் ரி. இரத்தினம், கலாநிதி சு. பத்மநாதன் ஆகியோர் உரையாற்றுவர். கலாயோகி வாழ்க்கை வரலாற்றுதிரைப் படக்காட்சியும், அரஸ்கோ சகோதரிகளின் பரத நாட்டியம், மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களின் நாடகம் ஆகியனவும் இடம் பெறும்.

### 'வருமானத்தில் ஒரு வீதம்! யாருக்கு அனுப்ப வேண்டும்?

சென்ற கிழமை 'சுதந்திரன்' இதழ் எண்ணத்தைப் படித்த தமிழன்பர்கள்பலர் வருமானத்தில் ஒரு வீதத்தை எந்த முகவரிக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டு எழுதியுள்ளார்கள்.

இது சம்பந்தமாக கூட்டணிக்கிளைகள் மூலமாக ஒவ்வோர் வீட்டுக்கும் மாதாமாதம் சென்று நிதி சேகரிப்பதற்கு கூட்டணியின் தலைமைப்பீடம் ஒழுங்குகள் மேற்கொண்டு வருகிறது.

அதற்கு முன், தங்கள் வருமானத்தில் ஒரு வீதத்தை இயக்கத்துக்காக அனுப்பிவைக்க விரும்பும் அன்பர்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பலாம்.

சி. கதிரவேற்பிள்ளை பா. உ.
இணைப்பொருளாளர் த. வி. கூ.
68, குருெசெட் ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்,

—4-ம் பக்கத் தொடர்

அமர்க்களமாக வாழ்ந்து வந்தார். அவர் சீதன ஒழிப்பின் தலைவன் என மேடை தோறும் முழங்கினர். சீதனத்தை ஒழிக்கக் கச்சை கட்டிப் போராட்டம் நடத்துவேன் என ஆர்ப்பரித்தார். இறுதியில் என்ன நடந்தது. அந்தச் சீதன ஒழிப்பு வாதி கொழுத்த சீதனம் வாங்கிக் கொண்டு அலட்சியவாதியாக மாறினர். இப்படி ஊரை ஏமாற்றும் போலி இலட்சியம் நமக்கு வேண்டாம். அதுதான் இளைஞர்களே; வெறும் பேச்சுப் பேசிக் காலத்தைக் கடத்தியது போதும். நமது உரிமை மீட்கப் போராடுவோம்; பாதை தவறினல் எவரையும் திருத்த முற்படுவோம். இனியும் தூக்கம் போட்டது போதும். அவல உணர்வு போக்க இளைஞர்களே எழுங்கள்! வெற்றி பெறுங்கள். உங்களது அரசியல் விழிப்புணர்ச்சியை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது"

இவ்வாறு அடிகளார் உரையாற்றினர்.

(ஆரையம்பதி ஆ. தங்கராசா)

—3-ம் பக்கத் தொடர்

காவல்துறையினரால் - இராணுவத்தால் இம்சிக்கப்படுகிருர்கள்.

இனக்கலவரங்களைச் சிங்கள ஏகாதிபத்தியம் அடிக்கடி ஏற்படுத்தி—தமிழரின் இரத்தத்தில் நீந்தி விளையாடுகிறது.

மரணங்களையும் உடைமை இழப்புக்களையும் — மாதர்கள் கற்பிழந்து கண்ணீர் சிந்திய நிகழ்ச்சிகளையும் 1956, 1958, 1961, 1974, 1977 ஆகிய ஆண்டுகளில் நடந்த இனக்கலவரங்களில் நாங்கள் மாறி மாறிச் சந்தித்தோம்.

கடந்த ஆண்டு நடைபெற்ற இனக்கலவரம் பற்றிக் கூறுவதானல்— அது ஒரு கண்ணீர்க் காவியமாகவே அமைந்துவிடும்;

தோழர்களே! இதுதான் இலங்கைத் தமிழர் பிரச்சனை. உலகில் யாருடனுவது சண்டை பிடிக்கவேண்டும் என்பதற்காக நாங்கள் சண்டைபிடிக்கவில்லை— உலகில் வாழும் ஏனைய தேசிய இனங்களைப்போல நாங்களும் அழியாமல் வாழவேண்டும் என்னும் ஒரு நியாயத்துக்காகவே நாங்கள் சண்டை பிடிக்கிருேம். இழந்த எங்கள் சுதந்திரத்தைப் பெறுவதற்காக நாங்கள் இன்று களத்தில் நிற்கிருேம். ஏனைய மக்களைப்போல் நாங்களும் மானத்தோடு தலைநிமிர்ந்து நிற்கஎண்ணுகிருேம். ஆசைப்படுகிருேம்;

சுதந்திரம் எங்கள் உரிமை. சுதந்திரத்துக்காகப்போராட வேண்டியது எங்கள் கடமை. உரிமைக்கான எங்கள் கடமையை நிறைவேற்றுவதில் நாங்கள் உறுதியாக நிற்போம் என்று உங்கள் முன் சொல்லிவைக்கிறேன்

தோழர்களே! வாருங்கள்! ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இந்தப் பெருவிழாவில் உங்களை நான் அழைக்கிறேன்— எங்கள் பிரச்சினையை அனைத்துலகப் பிரச்சனையாக்குவதில் எங்களோடு ஒத்துழைக்க வாருங்கள். தோழர்களே! வாருங்கள்! சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு எதிரான எங்கள் நியாயமான போராட்டத்துக்கு உறுதி என நிற்க வாருங்கள்! தோழர்களே வாருங்கள்— தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் எங்களுக்குக் கைதர வாருங்கள்!

நாங்கள் இறக்கைகள் உள்ள பறவைகளாக இருக்கிருேம்—ஆனலும் எங்களால் பறக்கமுடியவில்லை! நாங்கள் இதழ்கள் உள்ள மலர்களாக இருக்கிருேம்—ஆனலும் எங்களால் சிரிக்க முடியவில்லை! நாங்கள் அடிமைகள்!

வணக்கம்

சன்சயின்
சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
-இது ஓர் லாலா தயாரிப்பு-
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தை புதைகுழிக்கு அனுப்புகிறது புதிய அரசியல் சட்டம்!

## அந்நிய நாட்டுக்கு முழு இலங்கையையும் அடகுவைக்க வழிவகுக்கிறது 158வது விதி

பேரவைத்தலைவர் அவர்களே, தெரிவுக்குழுவின் அறிக்கையோடு ஓர் அரசியலமைப்பு யாப்பு இந்த சபையிற் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், அந்த யாப்பிலே இல்லாத சில பகுதிகள் இப்பொழுது நாம் விவாதிக்கும் சட்ட மூலத்தில் இடம் பெற்றிருப்பதை நாம் காண்கிறோம். இன்று நாம் விவாதிக்கும் அரசியலமைப்புச் சட்டமூலத்தின் 20ஆம் 21 ஆம் அத்தியாயங்கள் தெரிவுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட யாப்பில் இருந்தவையல்ல. ஆனால் இந்த இரண்டு அத்தியாயங்களும் மிக மிக பாரதூரமான மாற்றங்களையும் தாக்கத்தையும் ஏற்படுத்துவனவாக இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அப்படியானால் தெரிவுக் குழுவை அமைத்த நோக்கம் என்ன? அது வெறும் கண் துடைப்பா? தெரிவுக்குழுவொன்றை வைத்து அந்தத் தெரிவுக்குழு அரசியலமைப்பை யாத்ததாகக் கூறிவிட்டு, அதன் பின் தெரிவுக் குழுவுக்கு அப்பாற் சென்று வேறு பல திருத்தங்களைக் கொண்டதாக ஓர் அரசியலமைப்பைக் கொண்டு வருவதில்என்ன நோக்கம் இருக்கிறது என்பதை நாம் யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

20 ஆம் அத்தியாயம் எமக்கு மிக முக்கியமானது. இந்த அரசியலமைப்பின் 157 ஆம் விதி எல்லோரும் கவனிக்க வேண்டிய ஒன்று. இந்த விதி வருங்காலத்தில் எந்த ஓர் அரசாங்கமும், எந்த ஒரு கட்சியும் தாம் ஓர் அரசியல் நிர்ணய சபையை அமைத்து ஒரு புது அரசியல் திட்டத்தை யாப்பதற்கு அனுமதி கோரும் உரிமையை மறுக்கிறது. 157 ஆம் விதியின் கீழ், 1970 ஆம் ஆண்டு தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதன் கூட்டுக் கட்சிகளும் கேட்டது போல் இனி அடுத்து வரும் ஒரு தேர்தலில் ஓர் அரசியல் கட்சி, 12 ஆவது அத்தியாயத்திற்கு வெளியே போய் மக்களின் ஆணையைப் பெற்று ஓர் அரசியல் நிர்ணய சபை மூலம் ஒரு புது அரசியலமைப்பை யாப்பதற்கு உரிமை வேண்டும் என்று கேட்கும் உரிமை கூட மறுக்கப்பட்டிருக்கிறது.

இது மக்களின் சனநாயக உரிமையைக் கட்டுப்படுத்தும் மிகப் பாரதூரமான ஒரு சட்டம். மக்களின் இறைமையை எந்த வகையிலும் கட்டுப்படுத்தக் கூடாது என்றால் மக்கள் தங்கள் வாக்கினால் அரசியலமைப்பை ஓர் அரசியல் நிர்ணய சபை மூலம் திருத்துவதற்கு உரிமை அளிக்க, அரசியற் கட்சிகள் அந்த உரிமையைக் கேட்க ஏன் அரசியற் கட்சிகளுக்குச் சட்ட பூர்வமான தடையிருக்க வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது. ஆனபடியால், இதன் பலாபலன் மிகவும் பாரதூரமானதாக இருக்கும்.

இப்பொழுது கொண்டு வரப் போகும் தேர்தல் முறை, எந்த ஒரு கட்சியும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறாமல் தடுத்து விடும் என்பது எங்களுக்குத் தெரியும். எந்த ஒரு கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறாமல் தடுத்து விட்டு, அப்படி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றாலும் எந்த ஒரு கட்சியும் இந்த அரசியலமைப்பை, 12ஆவது அத்தியாயத்தின்படி, திருத்த இடமில்லாமற் செய்துவிட்டு, 12 ஆம் அத்தியாயத்திற்கு வெளியே போய் அரசியலமைப்பைத் திருத்த வேண்டுமென்று கேட்பதே, கேட்க வேண்டுமென்று கூறுவதே சட்ட விரோதம். அப்படிக் கூறுபவரை அது பத்து ஆண்டு சிறைவாசத்துக்கு உள்ளாக்கும். அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தால் அப்படிக் கூறுவது அவர் பதவியை இழக்கச் செய்யும் குற்றம், ஓர் அரசியல் கட்சி கூறினால் அது அந்தக் கட்சியினுடைய வேட்பாளர் பட்டியலையே ரத்து செய்யக்கூடிய குற்றம்என்று விதித்து வைத்து, இந்த நாட்டிலே, வருங்காலத்திலே மிகவும் பாரதூரமான அரசியல் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு விதியாக அது ஆக்கி வைக்கப்பட்டுள்ளது என்பதை இங்கே நான் கூறி வைக்க விரும்புகிறேன்.

எங்கே கட்டுப்பலமாக இருக்கிறதோ— எங்கே சனநாயக ரீதியாகக் கருத்தைக் கூறுவதற்கு வாய்ப்பு மறுக்கப் பட்டிருக்கிறதோ — அங்கே வெடிப்பு ஏற்படுகிறது, உடைப்பு ஏற்படுகிறது; அங்கே பிரளயம் ஏற்படுகிறது; அங்கே புரட்சி ஏற்படுகிறது.

சனநாயக ரீதியாக, சாத்வீக முறையிலே கூடக் கிளர்ச்சி செய்வதற்கு, அதை மாற்ற வேண்டுமென்று வாதாடுவதற்கு உரிமையை மறுக்கின்றது இது. இங்கேதான் இந்த விதியின் இரண்டாவது தாக்கம்.

அதுமாத்திரமின்றி, 1976 ஆம் ஆண்டு நாம் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தை எடுத்த பொழுது முந்திய அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்த சட்ட விதிகளை, இந்த

யிலே இப்படி சனநாயக ரீதியான உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வழி வகைகளை அடைத்து, இறுக்கமாகக் கொண்டு வரப்பட்ட அரசியல் அமைப்புகள்தான் பல நாடுகளிலே புரட்சிகளுக்கு வழி வகுத்தன என்று நான் இச்சந்தர்ப்பத்திலே மிகப் பொறுப்புணர்ச்சியோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

இந்த 158 ஆவது விதி உரிமைச் சாசனம் யாருக்கு? வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கும் வெளிநாட்டு மூலதனம் இடுவோருக்கும்தான். இலங்கையில் வெளிநாட்டவருக்கு இந்த நாட்டவர்களுக்கு இல்லாத உரிமைகள் எல்லாம் அளிக்கின்ற உரிமைச் சாசனம்தான் இந்த இருபதாவது அத்தியாயத்தில் 158 ஆவது விதி.

இதில் கூறப்படுகின்றது வெளிநாட்டினுடைய பிரசைகளை, அதாவது இந்த நாட்டில் வசிப்பவர்களை பாதுகாப்பதற்கான ஒப்பந்தமாகவும் அது இருக்கலாம் என்று. அப்படியானால் ஒரு நாடு இங்கு முதலீடு செய்திருக்கும் தனது பிரசைகளைப் பாதுகாக்க தனக்கு ஒரு படை வைத்திருக்க உரிமை வேண்டுமென்றும் ஒரு ஒப்பந்தம் எழுதலாம். அதற்குத் தடை இல்லை. அப்படி ஓர் ஒப்பந்தம் எழுதினாற் கூட அதை மூன்றில்இரண்டு பெரும்பான்மையால் இச்சபை ஏற்றுக் கொண்டால் வருங்காலத்து மக்கள் அதற்கு விரோதமாக நின்றாலும் கூட மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாத இடத்து அதை நீக்க முடியாது. அதை இரத்து செய்யவும் முடியாது. இது உண்

**புதிய அரசியல் சட்டத்திலிடம் பெற்றிருந்த ஜனநாயக விரோத — பாஸிஸ விதியான 157வது சரத்தைக் கண்டித்தும் அதனாலேற்படக் கூடிய விபரீத விளைவுகளையிட்டு கடுமையான தொனியில் எச்சரித்தும் தேசிய அரசுப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் 3-8.78ல் பேசினார். அவரது பேச்சின்போது குறுக்கிட்ட பிரதமர் பிரேமதாசா, அப்படியானால் எங்களை என்ன செய்யச் சொல்கிறீர்கள் என்று கேட்டார். அந்த விதியை அரசிலமைப்பிலிருந்து முற்றாக நீக்கிவிடுங்கள் என்றார் திரு. அமிர்தலிங்கம். எதிர்க்கட்சித் தலைவரின் கடுமையான எதிர்ப்பினால் அந்த விதி இப்போது அரசியலமைப்பிலிருந்து அகற்றப்பட்டுவிட்டது.**

**மேற்படி சர்வாதிகார விதியைக் கண்டித்து திரு. அமிர்தலிங்கம் பேரவையில் ஆற்றிய உரை இங்கு இடம்பெறுகிறது.**

அரசாங்கம் அரசியலமைப்பிலேயே கொண்டு வருகின்றது, 157 ஆவது விதியின் கீழ். ஒருவேளை இது நடைமுறைக்கு வந்த பின்பு அரசாங்கம் விரும்பிய நேரத்திலே என்னையும் எனது சகாக்கள் அத்தனை பேரையும் அடைக்கலாம்; நீதிமன்றத்திலே நிறுத்தலாம்; 10 வருடங்கள் எங்களைச் சிறைக்கு அனுப்பலாம்; சொத்துக்களைப் பறிமுதல் செய்யலாம்.

ஆனால், இந்தச் சட்ட மூலத்தையும் தெரிந்து

நான் நினைக்கவில்லை பேரவைத்தலைவர் அவர்களே, சிங்கப்பூரில்கூட இப்படி ஒரு விதி வைத்திருக்கிறார்கள் என்று. இந்த விதியின் கீழ் மூன்றில் இாண்டு பெரும்பான்மை அங்கீகாரத்தோடு ஒரு வெளிநாட்டிற்கு உரிமை கொடுத்து ஓர் ஒப்பந்தம் எழுதலாம். இப்படி ஒரு ஒப்பந்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் இந்தச் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டால் அது அரசியல் அமைப்பின் ஓர் அங்கமாக வரும். அப்படித்தான் இந்த விதி கூறுகிறது—

"Such treaty or agreement shall have the force of law in Sri Lanka and no written law shall be enacted or made and executive or administrative action shall be taken in contravention of such treaty or agreement."

கிட்டத்தட்ட அரசியல் அமைப்பின் ஓர் அங்கம் போல் அது கருதப்படும். அதற்கு விரோதமாக எந்தச் சட்டமும் நிறைவேற்றப்பட முடியாது. வருங்காலத்தில் ஓர் அரசாங்கம், நான் ஆரம்பத்தில் சொன்னது போல மூன்று இரண்டு பெரும்பான்மையுடன் வர முடியாது. புதிய தேர்தல் முறையால் எந்த ஒருகட்சியும்இனிமேல் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற முடியாது; அப்படியானால் எந்த ஒரு கட்சியும் இந்த விதியைத் திருத்த முடியாது. அப்படியானால் மக்கள் கட்டளை இட்டாற் கூட வருங்காலத்தில் பதவிக்கு வருகின்ற எந்தக் கட்சியும் வெளிநாட்டுடன் செய்து கொண்ட இத்தகைய ஓர் ஒப்பந்தத்தை இரத்து செய்ய முடியாது. அத்தகைய ஒப்பந்தத்துக்கு விரோதமாக யாரும் போக முடியாது. அத்தகைய ஒப்பந்தம் எத்தன்மைத்தானதாயும் இருக்கலாம்,

மையில் ஒரு மோசமான சூழ்நிலை;

வெளிநாட்டு மூலதனத்தை முடக்குவோருக்கு, வெளிநாட்டுத் தலையீட்டிற்கு மிகப் பாரதூரமான வகையில் வழிவகுக்கும் ஒரு விதி இந்த விதி என்பதை இந்தச் சபை அங்கத்தினர்களுள் எத்தனைபேர் உணர்ந்து இருக்கிறார்களோ எனக்குத் தெரியாது. விசேடமாக, இளம் அங்கத்தவர்கள்' பின்வரிசை அங்கத்தவர்கள் இந்த விதியைப் படிக்க வேண்டும். படித்துப் புரிந்து கொள்ள வேண்டும். வருங்காலத்தையே அடகு வைக்கும் ஒரு விதி இது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும் நாமும் இதனால் பாதிக்கப்படுகின்ற மக்கள் என்ற வகையில் இதைச் சுட்டிக் காட்ட வேண்டிய கடமை எனக்குள்ளது.

இந்தத் தெரிகுழு என்ற குழுவை வைத்து விட்டு அதற்குத் தெரியாமல்

—7ம் பக்கம் பார்க்க



### தேசிய அரசுப் பேரவையில் அமிர்-3

அந்த விதமான ஒரு சூழ்நிலைக்கு உட்படுத்துகின்ற ஒரு விதியாக— தெரிவுக் குழுவினால் கூட ஆராயப்படாத ஒரு விதியாக இது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நான் இச்சபையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எந்தக் காலத்திலாவது நாங்கள் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக் கொண்டு இந்த அரசியலமைப்பை மாற்றி எங்களுடைய உரிமையைப் பெற முடியாது. ஏனென்றால் நாம் எமது உரிமையைப் பெறுவதற்கு இந்நாட்டிலே கிளர்ச்சி செய்யத்தான் வேண்டும். இந்த நாட்டிலே நாங்கள் அமைதியான முறையிலே மக்கள் மத்தியிலே பிரசாரம் செய்யத்தான் வேண்டும். இந்த அரசியலமைப்பை மாற்ற வேண்டும். எமது இறைமை நிலைநாட்டப்பட வேண்டும். எமது உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும். இதற்காக நாம் கிளர்ச்சி செய்யத்தான் வேண்டும்.

கொண்டுதான் சென்ற வாரம் இறுதியிலே ஞாயிற்றுக்கிழமை கூடிய எமது கட்சியினுடைய மகாநாட்டிலே நாம் முடிவு எடுத்திருக்கிறோம். என்ன பலன் கிடைத்தாலும், என்ன தண்டனை எமக்குக் கிடைத்தாலும் அவற்றால் நாம் அச்சுறுத்தப்பட மாட்டோம்; அவற்றுக்கு நாம் அடி பணியமாட்டோம் என்று.

எமது இலட்சியத்தை— எமது இனத்தின் விடுதலையாகிய இலட்சியத்தை நோக்கிச் செல்வதற்கு, அதனால் வருகின்ற பலாபலன் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு செல்வதற்கு நாம் தீர்மானித்திருக்கிறோம் என்பதை நான் இவ்விடத்திலே கூறி வைக்க விரும்புகிறேன்.

பேரவைத்தலைவர் அவர்களே, புரட்சியின் வித்து இந்த விதியிலே விதைக்கப்பட்டிருக்கிறது. இதனை நான் ஒரு பயமுறுத்தலாகக் கூற விரும்புகிறேன். மற்ற நாடுகளின் அரசியல் வரலாற்றை அறிந்தவன் என்ற முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இளைஞரும் முதியோரும்

# ஆவரங்கால் மாநாடு- சில சிந்தனைகள்

தமிழரசுக் கட்சியின் மகாநாடுகளிலும் கூட்டணி மகாநாடுகளிலும் காலந்தோறும் ஏற்பட்டுவந்த இளைஞர்—முதியோர் சிந்தனை மோதல் ஆவரங்காலில் மிகவும் தீவிரமாக நடைபெற்றது. அடிக்கடி தீப்பொறிகள் கிளம்பின. இம் முறையும் வழக்கம்போல முதியோரின் அறிவு மொழிகள் என்ற குளிர் நீர் இளைஞர்களின் உள்ளத்தெழுந்த தீக்கொழுந்துகளை அணைப்பதில்வெற்றி கண்டது. ஆனால் இந்த நிலை இளைஞர்களுடைய எழுச்சியை முனை முறிப்பதாக அமையக் கூடாது. 1948ஆம் ஆண்டிலிருந்து தமிழ் பேசும் மக்கள் குடியுரிமை, மொழியுரிமை, அரசஅலுவல் புரியும் உரிமை, உயர்கல்வியுரிமை தாயக உரிமை என்பவற்றைப் படிப்படியாக இழந்து வந்துள்ளனர். எனினும், இழந்த உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கும் உரிமையும் போராடும் உரிமை மட்டும் அவர்களுக்கு இருந்தது. கொடுமைமிக்க சொல்லின் யாப்புக்கூட இந்த உரிமையைப் பறிக்கவில்லை. ஆனால் தார்மீக செயவர்த்தன யாப்பு அந்த உரிமையைக் கூடப் பறித்துவிட்டது. இன்று தமிழர் இழப்பதற்கு எதுவுமில்லை என்ற நிலையை அடைந்துள்ளனர். இந்த நிலையிலும் இளைஞர்களின் தீவிர உணர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டுமா?

எந்த அரசியல் யாப்பையும் அதன் ஆரம்ப நிலையில் எதிர்த்து முறியடிக்காவிட்டால் அது பழகி ஏற்றுக்கொண்டு வாழும் நிலை ஏற்பட்டுவிடும். சோல்பரி யாப்பினை நாம் சகித்துக்கொண்டோம். அது எமது நண்பனாக இருந்தது. சோல்வின் யாப்பு எமது நண்பனாக இருந்தது; சிங்களம் மட்டும் எமது கூட்டாளி. சிங்கள ஸ்ரீ எமது உறவினன். தமிழீழ நிலம் பறிக்கப்படுவதை நாம் பார்த்துக்கொண்டு ஆக்கிரமிப்பாளரோடு நண்பராக வாழ்கிறோம். 1956, 1958, 1977ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த இனக்கொலைகள் எமது விருந்தாளிகள். மீண்டும் ஒரு வகுப்புக் கலவரத்தை மகிழ்ச்சியோடு எதிர்பார்த்துக்கொண்டு வரவேற்கத் தயாராகக் காத்துக்கொண்டு இருக்கிறோம். இதே நெறியில் செயவர்த்தன யாப்பும் எமக்குத் தோழமையுள்ளதாகி விடுமா? "பேயொடாயினும் பிரிதலரிது என்றபடி இந்தப் பேயையும் பாராளுமன்ற சனநாயக மரபுகளின் படி ஏற்றுக்கொள்ளப்போகிறோமா? 51 மடையர்களின் தீர்மானத்திற்கு 49 மடையர்கள் கட்டுப்பட்டவர்கள் என்ற 'புனித' தத்துவத்தைத் தமிழீழ முழக்கமிடும் நாமும் 'புனித'ப்படுத்தப் போகிறோமா?

இளைஞர்களை ஆவரங்காலில் 'புறங்கண்ட' முதிய தலைவர்களை மாண்புமிகு பிரதமர் பாராட்டியதன் பின்னணியிலுள்ள சிந்தனையோட்டம் இதுதானா?

## செந்தமிழா சிந்தனை செய்

'செந்தமிழா சிந்தனை செய்'—இதுதான் ஆவரங்கால் கவியரங்கத் தலைப்பு கவிஞர்கள் தேசியப் பேரவை உறுப்பினர்களையும் இளைஞர்களையும் ஆட்சியாளரையும் பொதுமக்களையும் சிந்திக்கத் தூண்டும் வகையில் சூடாகவும் சுவையாகவும் கவிதை பாடினார்கள். காரையின் கவிதை "உள்ளத்தில் உள்ளது" கவிதை என்ற இலக்கணத்திற்கு உதாரணமாக அமைந்தது. அக்கவிதைகளின் தாக்கத்தை பின்னர் பேசிய சூடான பேச்சுக்கள் உணர்த்தின. "நூறு காரைகள் மலரட்டும்." என வாழ்த்துகிறோம்.

கவியரங்கத் தலைவரின் கவிதை ஏனையோரின் கவிதையிலிருந்து மாறுபட்டிருந்தது. இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் தமிழனைக் கூறுபோட்டு மோதவிடும் பழியை விளைவிக்கப் போகும் இயக்கத்தைச் சாடும் வகையில் தலைவரின் கவிதை அமைந்தது. மண் மற்ற செவ்வரத்தைச் சிவப்பை உதறிவிட்டு உதய சூரியன் சிவப்பைச் 'செந்தமிழர்களும்' ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற தலைமைக் கவிஞரின் ஆணை இளைஞர்களின் குரலாக ஒலித்து அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

## மட்டுநகர் முதல்வர்

மூதறிஞர் செல்வாவின் "செல்லப் பிள்ளை"களில் ஒருவரான சொல்லின் செல்வர் இராசதுரை ஏழு ஆண்டுகளின் பின் கூட்டணியின் இயக்கங்களில் தீவிரமாக இயங்க முன்வந்திருப்பது அனைவரையும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தியது. அமிரின் தலைமையை ஏற்று இளைஞர்கள் போராட முன்வர வேண்டுமென்ற அவரது பிரகடனம் இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆவரங்காலில் "இராசதுரை" என்ற பஞ்சாட்சரம் ஒலிக்கப்பட்ட போதெல்லாம் வானளாவ எழுந்த கைதட்டல் மக்களின் உள்ள உணர்வுகளை "நிர்வாணமாக" எடுத்துக் காட்டுவதாக அமைந்தது. ஆனால்...சொல்லின் செல்வர் காலத்துக்குக் காலம் சோர்ந்து, துவண்டு அஞ்ஞாத வாசம் புரியும் செயலுக்கு இனியாவது முற்றுப்புள்ளி வைப்பாரா?

## ஒன்றன் பின் ஒன்றாக ...

"மாவைசேனாதிராசாவும், கவிஞர் காசி ஆனந்தனும் பிறஇளந்தலைவர்களும் தார்மீக அரசின் சிறை விருந்தினர்களாகச் சென்ற காரணத்தால் இளைஞர் பேரவைக் கிளை அமைப்பு வேலைகள் முற்றுப் பெறவில்லை" இது வன்னியர் அரங்கில் ஒரு முதுபெருந் தலைவரின் அவலக்குரல், ஒரு பாராளுமன்றக் கட்சித் தலைவர் இவ்வாறு கூறினால் அதனை நாம் ஏற்றுக்கொள்ளலாம். தொகுதி தோறும் தலைவர்களுக்கு வாரிசுகள் உருவாகிவிட்டால் அது தேர்தல் காலத்தில் பல சிக்கல்களை உருவாக்கலாம்.

ஆனால் விடுதலை இயக்கம் ஒன்றின் கிளை அமைப்புக்கள் பலம் பொருந்தியவையாகவும் நிலையானவையாகவும் தொடர்ந்து இயங்குபவையாகவும் அமையவேண்டும். போரிலே படைகள் வியூகங்களாக வகுக்கப்பட்டு ஒன்றன் பின் ஒன்றாகப் போருக்குச் செல்லத்தயாராக வைக்கப்பட்டிருக்கும் ஓர் அணி முறியடிக்கப்பட்டால் அடுத்தது. அதுவும் முறியடிக்கப்பட்டால் அடுத்தது. இவ்வாறு படையணிகள் முன்னேறும். ஆனால், நாம்எல்லாவற்றையும் நாளை என்று பின்போடுகிறோம். கடந்த கால் நூற்றாண்டாக நடைபெற்ற கதை இன்னும் தொடர்வதா? கிராமந்தோறும் உறுதியும், செயலாற்றலும், விவேகமும், அரசியல் அறிவும் மிக்க இளந்தலைவர்கள் வெவ்வேறு மட்டங்களில் உருவாக்கப்படவேண்டும்.

## அடுத்த தேர்தல் தமிழீழத்தில்

அடுத்த தேர்தல் தமிழீழத்தில் என்ற குரல் 77தேர்தலில் ஒவ்வொரு தலைவரின் வாயிலும் மேடைதோறும் முழக்கமாக வெளிவந்தது. ஆவரங்காலில் தேர்தல் நியமனக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு வேட்பாளரை நியமிப்பதா அல்லது 1985இல் தார்மீக அரசு நடாத்தும் என எதிர்பார்க்கப்படும் தேர்தலுக்கு வேட்பாளரை நியமிப்பதா? இதன் தொழில் என்பது பற்றி எவரும் எதுவும் கூறவில்லை.

ஆனால், இளைஞர் படைக்கு ஆதரவாக நின்று தலைவர்களைப் போராடத் தூண்டும் மகளிர் பேரவையின் தலைவி திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் 'அடுத்த தேர்தல் தமிழீழத்தில் நடைபெறும். அதற்குமுன் தமிழீழத்தின் விடுதலையைப் பெற உழைப்போம் வாரீர்' என அறைகூவல் விடுத்தார்.

இதே அறைகூவல் ஒவ்வொரு தலைவரின் வாயிலுமிருந்து ஒலிக்குமானால் அன்றே தமிழீழ விடுதலை சாத்தியமாகும். அடுத்த தேர்தல் தமிழீழத்தில் நடைபெற்றே தீரும்.

—காங்கேயன்

(அடுத்த இதழில் முடியும்)

---

—6ம் பக்கத் தொடர்

கொண்டு வரப்பட்ட இருபதாவது அத்தியாயமும், இருபத்தோராவது அத்தியாயமும் மிக விசித்திரமான, வேடிக்கையான அத்தியாயங்களாகும். உண்மையாக ஒருவேளை இந்தச் சபையிலே இருக்கிற எங்களுக்கு, கட்சிகளாகத் தெரிவு செய்யப்பட்டு வந்திருக்கிற எங்களுக்கு. அதனால் தொல்லை இல்லாமல் இருக்கலாம். ஆனால், மக்கள் ஓர் இடைத் தேர்தலிற் கூட தமது கருத்தை எடுத்துக் கூறுவதற்கான வாய்ப்பை மறுக்கின்ற விதிகள் இருபத்தோராம் அத்தியாயத்தில் அடங்கியிருக்கின்றன.

மக்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் ஓர் இடைத் தேர்தலிலே தமது கருத்தை மக்கள் கூற முடியாது. ஏனெனில் இடைத் தேர்தலே நடக்காது; இப்பொழுது நடந்து கொண்டிருக்கிற தேர்தல் வழக்குகளிலே யாராவது அங்கத்தவர் தமது பதவியை இழந்து அதனால் இடைத்தேர்தல் வந்தாலேயொழிய எந்த அங்கத்தவராவது இறந்தாலோ, எந்த அங்கத்தவராவது முன்பு எங்கள் இன்றைய சனாதிபதி அவர்கள் 1975 ஆம் ஆண்டு செய்தது போலத் தம்முடைய பதவியை ராஜினாமாச் செய்து "நான் ஒரு கொள்கையிலே மக்களின் தீர்ப்பைக் கேட்கப் போகிறேன்" என்று முடிவு செய்தாலோ ஓர் இடைத் தேர்தலை ஏற்படுத்த முடியாது.

கடந்த பாராளுமன்ற ஆயுட்காலத்திலே எந்த உரிமையை பெருமையோடு இன்றைய சனாதிபதி அவர்கள் நடைமுறைப்படுத்தி மக்களின் உரிமையை நிலைநாட்டினார்களோ அந்த உரிமை இன்று இந்தப் பாராளுமன்றத்திலே இருக்கின்ற அங்கத்தினர்களுக்கு மறுக்கப்படுகிறது. எந்த அங்கத்தவரும் அரசாங்கத்தில் அரசாங்கக் கட்சி அங்கத்தினராக இருக்கலாம். அவர் அரசாங்கம் செய்வது தவறுஎன்று நினைக்கலாம். மனச்சாட்சி உள்ளவர்கள் இருக்கிறார்கள். கட்சி யந்திரத்துக்குக் கட்டுப்பட மறுப்பவர்கள் இருக்கிறார்கள். தவறு என்று நினைக்கிற ஒன்றை வைத்து "சரி நான் மக்களின் தீர்ப்பைக் கோரப் போகிறேன்" எனக் கூறுகிறவர்கள் இருக்கிறார்கள். வெளியே போய் பதவியைராஜிநாமா செய்து ஓர் இடைத்தேர்தலை ஏற்படுத்த அவர்களால் முடியாது.

1972 ஆம் ஆண்டு எமது கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம் அவர்கள் ஒரு இடைதேர்தலை ஏற்படுத்தியது போல ஏற்படுத்த முடியாது. அப்படி ஒருவர் ராஜினாமா செய்து விட்டால் அவருடைய இடத்துக்கு அந்தக் கட்சி வேறொருவரை நியமிக்கும், அவர் எங்கிருந்து வந்தவராகவும் இருக்கலாம். ஒருவேளை அவர் கட்சித் தலைவருடைய சமையலறையில் வேலை செய்பவராகவும் இருக்கலாம் யாரையும் நியமிக்கலாம். கட்சி ஏற்றுக்கொண்டாற் சரி. அந்தத் தொகுதி மக்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. இது எவ்வளவு பாரதூரமானது என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சாதாரண அங்கத்தவர்கள் கட்சி நிர்வாகத்தின் கட்டளைக்கிணங்க யந்திரங்களாக மாற்றப்படுகிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சிக்கு இடம் கிடையாது. அவர்கள் தங்களுடைய மனச்சாட்சிப்படி கட்சியின் தலைமையை மீறிப்போக உரிமை கிடையாது. கட்சித் தலைமையை மீறிப் போனால் பதவி இழப்பாரென்றும் வைப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், பதவியை விட்டுப் போய் மக்களின் தீர்ப்பைப் பெறுகிற உரிமை கூட மறுக்கப்படுவதாக இருந்தால் நிச்சயமாக அது சனநாயகம் அல்ல என்பதைக் கூறிவைக்க வேண்டியது என்னுடைய கடமையாக இருக்கிறது.

## ஸ்ரீலங்கா —

—3-ம் பக்கத் தொடர்

மாற்றுவது நன்றாக இராதென்று கல்கி ஆசிரியர் ஆரம்பத்திலேயே கூறிவிட்டாரே—

ஆயினும்—

23-7-78 கல்கி இதழைப் பிரித்து, சிவபாத சுந்தரனாரின் கட்டுரைத்தொடரைப் பார்த்தபோது. என் கண்களையே நம்ப முடியவில்லை.

'ஸ்ரீ லங்கா யாத்திரை, என்ற தலைப்பு "இலங்கை (ஸ்ரீ லங்கா) யாத்திரை" ஆக மாற்றப்பட்டிருந்தது.

இலங்கைத் தமிழ் மக்களின் சார்பில் நான் எழுதிய கடிதத்தை மதித்து, கட்டுரை தொடங்கிய பின்னரும், கட்டுரைத்தலைப்பை மாற்றியமைத்து ஈழத்தமிழர்களின் உணர்ச்சியை மதித்த கல்கி ஆசிரியரையும், கட்டுரை ஆசிரியரையும் நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

ஈழத்தமிழ் மக்களுக்கிடையே கல்கிக்கு இருந்து வரும் செல்வாக்கும் மதிப்பும், இச்செயல் மூலம் இன்னும் ஒரு படி உயர்ந்து விட்டதென்றே கூற வேண்டும்.

—கோவை மகேசன்

## கீரை விதை இலவசம்

வீட்டுத்தோட்டம் செய்பவர்களுக்கு கீரை விதைகளை யாழ்ப்பாணம் "மில்க்வைற்" தாபனத்தார் இலவசமாக வழங்குகின்றார்கள். தேவையுள்ளவர்கள் அவர்களோடு தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளும்படி கேட்கப் படுகின்றார்கள்.

## லண்டன் தமிழர் விடுதலைப் பேரணியின் செய்தி இதழ்

லண்டனிலியங்கி வரும் தமிழீழ விடுதலை இயக்கங்களில் ஒன்றான தமிழர் விடுதலைப் பேரணி 'மீளும் ஈழம்' (MEELUM EALAM) எனும் பெயரில் மாதாந்த செய்தி இதழொன்றை 1978 யூலையிலிருந்து வெளியிட ஆரம்பித்துள்ளது;

வெளிநாடுகளிலுள்ள தமிழர்களுக்கும் தமிழர் அல்லாதாருக்கும் ஈழத் தமிழர் பிரச்சினையையும், தமிழீழ விடுதலைக் கோரிக்கையிலுள்ள நியாயத்தையும், ஈழத்தில் சிங்கள ஸ்ரீலங்காவின் ஆக்கிரமிப்பு— இன ஒழிப்பு நடவடிக்கைகளினால் தமிழ் மக்கள் படும் துன்பங்களையும், தமிழர் விடுதலைப் பேரணியின் நடவடிக்கைகளையும் எடுத்து விளக்கும் விதத்தில் 8 பக்கங்களில் வெளி வந்திருக்கும் இந்த இதழ் தளர்ச்சியின்றி தொடர்ந்து வெளிவந்து தமிழினவிடுதலைப் போராட்டத்துக்கு வெளிநாடுகளின் ஆதரவைத் திரட்டித்தர வேண்டுமென்று கூறி வாழ்த்துகிறோம்.

## சுதந்திரன் சந்தா

ஓராண்டுச் சந்தா ரூ. 50-00

அரை ஆண்டு ,, ரூ. 25-00

விபரங்களுக்கு:
5, மகாத்மா காந்தி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

—7ம் பக்கம் பார்க்க

சார்பில் மாவைசேனாதிராசா ஆற்றிய உரையின் சுருக்கம்!

இலங்கையில் இரண்டு தேசிய இனங்கள், இரண்டு நாட்டினங்கள். நான் தமிழீழத்தின் இழந்துவிட்ட சுதந்திரத்துக்காகப் போராடும் தமிழினத்தின் சார்பில் கலந்து— கொள்கிறேன். சிங்கள இனத்தின் பிரதிநிதிகளாக இங்கே எட்டு கட்சிகளின் பிரதிநிதிகள் இருக்கிறார்கள்.

தமிழினத்தின் தலைவர் திரு. அமிர்தலிங்கம் இன்று இலங்கை தேசிய அரசுப் பேரவையின் எதிர்க் கட்சி முதல்வர், எங்கள் தலைவராக இருக்கிறார். தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் சார்பிலும் எங்கள் பங்கினை யொட்டி மகிழ்ச்சி தெரிவிக்கிறோம்.

சென்ற ஆட்சிக்காலத்தில் அவசரகாலச்சட்டத்தின் கீழும் இன்றைய ஆட்சிக் காலத்திலும், ஐந்து ஆண்டுகளாக, தமிழினத்தின் சுதந்திரத்திற்காகப் போராடுகிறோம் என்பதால் சிறை— வைக்கப்பட்டவர்களில் கவிஞர் காசியானந்தனும் நானும் ஆடி மாதம் 24ம் திகதி வி[illegible]சலை செய்யப் பட்ட பின் இம் மாநாட்டில் பங்கு பற்றக்கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். (கைதட்டல்)

எங்கள் தலைவர் அமிர்தலிங்கம் சிறந்த சமதர்மவாதி. தமிழீழம் விஞ்ஞான சமதர்ம சுதந்திரத் தமிழீழமாக அமையுமென்ற உறுதியை உலகத்திற்குத் தமிழினத்தின் சார்பில் கட்டளை பெற்று அறிவித்திருக்கிறார்.

நாம் நான்கு சமமான போராட்டங்களில் ஈடுபட்டிருக்கின்றோம்.

ஒன்று— இலங்கையில் வாழும் தமிழினம் தான் இழந்து விட்ட சுதந்திர ஆட்சியுரிமையை, தமிழீழத்தை மீட்டிடப் போராடுகிறோம்.

இரண்டு— சுதந்திரத் தமிழீழம் விஞ்ஞான சமதர்மத் தமிழீழமாக அமைய அதனை உருவாக்க நாம் போராடுகிறோம். (கைதட்டல்)

மூன்று— தமிழீழ மக்கள் போர்த்துக் கேயரிடமும், டச்சுக்காரரிடமும், ஆங்கிலேயரிடமும், இன்று சிங்களவரிடமும் இழந்துவிட்ட சுதந்திரத்தை மீட்கப் போராடுகிறோம்.

இன்றுசிங்களஏகாதிபத்திய, முதலாளித்துவ அடிமைத் தளையில் இருந்து தமிழினத்தைத் விடுவிக்கப் போராடுகிறோம்.

எமது விடுதலைப் போராட்டம் இவ்வாறு நடந்துகொண்டிருக்கும் வேளையில்;

நான்காவது- உலக ஏகாதிபத்தியத்திற்கெதிராக அணிதிரண்டிருக்கும் உங்களுடன் ஒத்துழைக்கவும் இணைந்து போராடவும் அவ்வாறு இணைந்து போராடும் ஜனநாயக சக்திகளுடன் நட்புறவை வளர்க்கவும் உலக அமைதியை, சமாதானத்தை நிலைநாட்டவும் உறுதி கொண்டிருக்கிறோம்.

நாம் உருவாக்கவிருக்கின்ற விஞ்ஞான சோசலிச தமிழீழம் ஆசியாவிலும், இந்துமா சமுத்திரப் பகுதியிலும் முக்கிய இடம்பெறும். அத்திலாந்திக் சமுத்திரப் பகுதியில், லத்தீன் அமெரிக்காவில் கியூபா உருவாகியதைப்போலென்று கூடசொல்லுவேன். (கைதட்டல்)

மார்க்ஸிச லெனினிச சித்தாந்தப்படி உலகப்பாட்டாளிவர்க்க ஆட்சிஉருவாகிடவேண்டும்; அதற்காகவும் விஞ்ஞான சமதர்மத் தமிழீழக்குடியரசு துணை நிற்குமென உண்மையாகவே உறுதி கொண்டிருக்கிறோம். (பலத்தகைதட்டல்)


## "மில்க்வைற் நீல சோப்"

நுரைவளம் மிக்க நீலசோப் இரண்டுவித நன்மை தருகிறது.

அழுக்கைநீக்குகிறது, நீலம்போடும் வேலையை நீக்குகிறது.

மூலப் பொருள்கள் விலையேற்றம், காகித விலை ஏற்றம் இருந்தும் நாங்கள் சோப் விலையைக் கூட்டவில்லை.

—விலை சதம் 60 மட்டுமே!

**மில்க்வைற்—யாழ்ப்பாணம்.**

## செல்லமகால்

எம். ஜி. ஆர், சரோஜாதேவி, மனோகர், ஜெயலலிதா, நம்பியார் நடித்த-

## அரச கட்டளை

(புத்தம் புதிய கொப்பி)

## கெயிட்டி [கொட்டாஞ்சேனை]

முத்துராமன் - கே. ஆர். விஜயா - நடித்த -

## தீர்க்கசுமங்கலி

## றீகல் மட்டுநகர்

## பெரும் புகழும்

## கிங்ஸ்லி

(கொழும்பு)

சிவாஜி கணேசன், ஜமுனா —நடித்த—

## பொம்மைக் கல்யாணம்

## விஜயா (மட்டுநகர்)

5-வது வாரம்

சிவாஜி நடித்த—

## உத்தமன்

— கலர் —

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

## கெப்பிட்டல்

## பால நாகம்மா

## லிடோ (யாழ்நகர்)

## தீர்க்க சுமங்கலி

(புதிய பிரதி)


கொழும்பு 12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஆகஸ்ட் 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை [illegible] அச்சுப்பதிப்பு: [illegible]ஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org